# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
*Ayurveda Bhushan*
**Pandit M. Duraiswami Aiyangar,**

பத்திராதிபர் :
ஆயுர்வேத பூஷணம்.
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

புஸ்தகம் 4. Vol. IV. | நளஹு மாசிமீ—பங்குனிமீ. MARCH—1917. | ஸஞ்சிகை 7. No. 7.


## CAT AS A DISEASE CARRIER.

## பூனை பிணியைப் பரவச்செய்யும்.

BY R. NARAYAN, L. M. & S.

---

இந்தியாவில் ஜனங்கள், முக்கியமாய் முகம்மதியர்கள் பூனையை அன்புடன் வீடுகளில் வளர்ப்பது வழக்கம். சிறுவர்கள் எப்பொழுதும் பூனையைச் சீராட்டி, அதைக் கட்டியணைத்து, முத்தமிட்டு விளையாடுவதை நாம் பார்க்கிறோம்; விஷயமுணராத அச்சிறுவர்கள் இருக்கட்டும்; படித்தறிந்த பெரியவர்கள்கூட தொற்றுவியாதியினாலான அபாயங்களைக் கவனிக்காதவர்களாய், ஆரோக்கிய முறைகளின் ஸம்பந்தமான நிபந்தனைகளில் கருத்தும் கௌரவமும் வைக்காதவர்களாய் அப்பிராணிகளோடு ஆவலுடன் பழகுவது பரிதவிக்கத் தகுந்ததாம். இதைப்பற்றி வியாதிக்கு ஸம்பந்தப்பட்ட மட்டிலும் இதற்கு முன் ஏதோ சொற்ப விஷயம் சாஸ்திர நிபுணர்களுக்குத் தெரிந்திருந்ததுண்டு; ஆனால் இப்பொழுது ஸமீபகாலத்தில் சாஸ்திராராய்ச்சியில் மிகப் பிரவீக்தி பெற்றவர்கள், குரல்வளையில் ஸம்பவிக்கக்கூடிய களாசர்ப்பதம் (diphtheria) என்கிற வியாதிக்கும், வேறு சில தொற்று வியாதிகளுக்கும் காரணமான விஷக்கிருமிகள் பூனைகளின் மூலமாய் வியாபித்துவருவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

“இராயல் ஸொஸைடி ஆப் மெடிஸின்” என்கிற வைத்தியஸங்கம் ஸமீபத்தில் கூட்டிய ஒரு ஸபையில் டாக்டர் ஆர்னல்ட் லாஸன் என்பவர், மனிதர்களுக்கு நேத்திரத்தில் வர்த்ம ரோகம் உண்டாவதைப்பற்றி ஒரு ரிபோர்டு தயார் செய்து படிக்கதில், அவ்விதமான வியாதி பூனைகளின் மூலமாகவே விசேஷமாகப் பரவிவருவதாக விவரித்திருந்தார். மிகவும் கியாதிபெற்ற மற்றொரு நேத்திரரோக நிபுணர், நேத்திரரோகத்தினால் வருந்திய ஒரு கேஸைப் பரீக்ஷித்ததில், அது பூனையின் மூலமாக மூன்று வயதுள்ள ஒரு பையனிடமிருந்து தொற்றியதென்று அவர் நன்றாகப் பரீக்ஷித்தறிந்தார் என்று “ஹாஸ்பிடல்” என்னும் வைத்தியப் பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு வியாஸத்தைக் கொண்டு நான் அறிந்தேன். ஒரு வீட்டில் வளர்த்துவந்த பூனையின் கண்ணிலிருந்து ஒருவிதமான நீர் வடிந்து கொண்டிருந்தது; அந்தப் பூனையோடு முத்தமிட்டு விளையாடிவந்ததால் மூன்று வயதுள்ள சிறுவனுக்கு மிகக் கடுமையான வர்த்மரோகம் (Conjunctival infection) உண்டாயிற்று; அப்பையனுடன் பழகிவந்த மற்றொருவனுக்கும் இதே வியாதி ஸம்பவித்தது; இவ்வியாதிக்ராஸ்தனின் கண்களின் நீரில் எவ்விதமான நுண்ணிய விஷக்கிருமிகள் காணப்பட்டனவோ, அதே விதமான கிருமிகள் பூனையின் கண்களிலிருந்து வெளியான நீரிலும்

இருப்பதாகப் பரீக்ஷித்தறியப்பட்டது. மிகவும் சிரமப்பட்டு பெருமுயற்சிகள் செய்து குழந்தையினுடையவும் மற்றொருவனுடையவும் நேத்திரங்கள் சிகித்ஸை செய்து காப்பாற்றப்பட்டனவாம்.

இயற்கையிலேயே அதிக கடுமையான அநேகம் தொற்றுவியாதிகள், வீட்டில் அன்புடன் வளர்க்கப்படும் பூனைமுதலிய பல ஜந்துக்களின் மூலமாக அவற்றுடன் பழகும் மனிதரிடம் பாவுவதாக ஸந்தேஹமின்றிக் கூறலாம். இதற்கு முற்கூறிய விதமாய் இன்னும் அநேகம் திருஷ்டாந்தங்களையும் எடுத்துச் சொல்லமுடியும். ஆனால், இப்பத்திரிகையைப் படிக்கும் நமது நண்பர்களே அவரவர்களுடைய அநுபவத்தில் பரீக்ஷித்தறிவது நலமென்று வற்புறுத்தி எழுத விரும்புகிறேன். எவரெவர்களுடைய வீட்டில் பூனை முதலிய ஜந்துக்கள் வளர்க்கப்படுகின்றனவோ அவர்களுடைய வீட்டில் இருப்பவருக்கு ஏதாவது தொற்று வியாதி ஸம்பவித்தால், அவ்வியாதிக்கும் வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளுக்கும் ஏதாவது ஸம்பந்தமுண்டாவென்று எளிதிற் பரீக்ஷித்து அறியலாம். "வியாதி வராமலே தடுப்பது சிகித்ஸை செய்வதினும் மேலான காரியம்" என்னும் பழமொழியை மிகவும் நன்றாகக் கவனித்து வீடுகளில் ஸாத்தியமான வரையில் பூனை, நாய்முதலிய ஜந்துக்களை வளர்க்காமல் இருந்தால், அல்லது வளர்த்து வந்தால் கூடுமான சீக்கிரத்தில் அவற்றை விலக்கிவிட்டால், நமது குழந்தைகளுக்கு அபாயகரமான தொற்றுவியாதிகள் ஸம்பவிக்காமலே இருந்துவிடும்.

---

## THE THEORY OF TRI - DOSHAS.

### த்ரிதோஷ தத்துவம்.

BY T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

---

(முன் தொடர்ச்சி.)

புராதன கிரந்தங்களில் பித்தத்தின் காரியங்கள் ஐந்து தலைப்பின்கீழ் தொகுத்து விரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :—

1. பாசகம்— ஜீர்ணித்தலும் மலங்களை யகற்றலுமாம்.

2. ரஞ்ஜகம்— அன்னரஸத்திற்கு அதற்குரிய விசேஷவர்ணத்தைக் கொடுத்தல்.

3. ஸாதகம்— இருதயத்தில் அமர்ந்திருந்து புலன்கள் தத்தமக்குரிய உணர்ச்சித் தொழில்களை நடத்துவதற்குச் சாதனமாயிருக்கின்றது. இருதயம் காலப்பிரமாணக் கிரமமாய் விரிந்து குவியச் செய்வதனாலே மேற்சொல்லியபடி புலன்களின் உணர்ச்சிக்கு அது ஸாதனமாகின்றது. பண்டைக்காலத்தில் எல்லாத்தேசத்தாரும்புலன்களுக்கு உணருந்தன்மை இருதயத்தினால் உண்டாகின்றதென்று நம்பியிருந்தார்கள்.

4. ஆலோசகம்— தரிசன நரம்புஜாலத்தில் (retina) உண்டாக்கும் மாறுபாடுகளினால் கண்ணுக்குப் பார்வையளித்தல்.

5. பிராஜகம்— தோலின்வழியாய் அசுத்திகளைக் களைதல். (தோலுக்குப் பிரகாசம் அளித்தல்.)

பித்தமானது புளிப்புக்களின் மூலமாய்ப் பெரும்பாலும் தன் காரியங்களைச் செய்கின்றது. இந்த ஸங்கர்ப்பத்தில் அதற்குரிய ஆலோசகத் தொழிலைப்பற்றிச் சொல்லப்படும் விஷயமொன்று கவனிக்கத்தக்கது.

போட்டோகிராப் என்னும் சாயாபடம் இக்காலத்தில் எடுக்கிறார்களல்லவா? அப்படிப்போலப் பொருள்களின் உருவத்தைக் கிரஹிக்குந்தன்மை கண்ணிலுள்ள தரிசந சவ்வுகளுக்கு இருக்கிறதென்று இக்காலத்துச் சாஸ்திரிகள் நினைத்து சோதித்துப்பார்த்ததில், போடோகிராப் சூத்திரம் உருவச்சாயையைக் கிரஹிப்பதுபோல நமது கண்ணும் உருவங்களின் சாயையைக் கிரஹித்துத் தெரிந்துகொள்ளுகின்றது என்று சொல்வதற்குப் போதுமான ஏதுக்கள் அகப்படவில்லை. தரிசந சவ்வுகளில் ஏற்படும் மாறுபாடுகளினால் கண்ணுக்குப் பார்வையுண்டாகின்றது என்று சொல்வது ஒருக்கால் பொருந்தலாம் என்று ஷெரிடன் லீ என்னும் சாஸ்திரி, ஜீவாங்கங்களின் ரஸாயனதாரம்

(The Chemical Basis of Animal Body) என்னும் விஷயமாய் எழுதியுள்ள புஸ்தகத்தில் 262-ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கின்றார்.

### சிலேஷ்மம்.

தேகத்தில் பித்ததாதுஸம்பந்தமான பல வகை ரஸாயன மாறுபாடுகள் நடக்கையில், உஷ்ணம் ஜனிக்கிறதென்றும், இந்த மாறுபாடுகளுக்கும் மற்றுமுள்ள காரியங்களுக்கும் அனுகுணமாயிருக்கும் சவ்வறைகள் அடிக்கடி உழன்றுகொண்டிருப்பதனால் தேய்வுறுகின்றனவென்றும் மேலே சொல்லியிருக்கிறோம் மேற்சொல்லியபடி ஜனிக்கும் உஷ்ணம் அதிகமாய்ப் போகாமல் தடுப்பதற்கான சக்தி வாய்ந்தது சிலேஷ்மதாதுவாகும்; அந்த உஷ்ணத்தின் சிதைவை (Thermolysis) ஒழுங்குபடுத்தி, சவ்வறைகளின் தேய்வழிவுகளை மட்டுப் படுத்துவதும் அந்தச் சிலேஷ்ம தாதுவே.

மானிட தேகத்திலுள்ள சவ்வறை ஒவ்வொன்றும் ஒருவகைத் திரவத்தோடு ஸம்பந்தப்பட்டிருக்கின்றது; அந்த சவ்வறைக்கு ஆதாரம் அந்தத் திரவமேயாகும். 'சிலேஷ்மம்' என்னும் பெயர் சலிஷ் (=தழுவுதல்) என்னும் தாதுவினின்று பிறந்துள்ளது. சிலேஷ்மமெனனும்பிராணசக்தியானது சவ்வறைகளின் இடைவெளிகளிலுள்ள மேறசொல்லிய திரவவஸ்துவின் அளவையும தன்மையையும இயக்குகின்றது; மற்றும் அந்தச்சவ்வறைகளைக் குளிர்ச்சியாய் அணைத்துத் தழுவி அவைகளுக்கு வலிமை யூட்டிவைத்துக் கொண்டிருக்கின்றது. காபபாற்றுவதும் குளிரச்செய்வதுமே அதன காரியமாகும; ஸ்தூலவடிவத்தில் அது கணுக்குழிகளிலும கிணரேக் குழிகளிலும மழமழபபெண்ணெயாக வாததிக்கனறது.

அது ஆக்கம் (anabdism) என்பதற்குச் சற்று ஒததிருப்பதாய்த தோன்றுகினறது; ஆனால், மேறசொல்லிய விவரததைக் கவனித்துப் பார்த்தால், பித்தத்தை அழிவுக்குப் பரியாய மாகவும (synonymous with Katobolism), சிலேஷ்மத்தை ஆக்கத்திற்குப் பரியாயமாகவும் (synonymous with Anabolism) சொல்லக் கூடாதென்பது தெளிவாகும். பித்தத்திற்கும் சிலேஷ்மத்திற்கும் தனித்தனியே வேறு வேறு அர்த்தங்களிருக்கின்றன. அந்த அர்த்தங்கள் பித்தம், சிலேஷ்மம் என்னும் பதங்களினாலல்லாமல் வேறு சொற்களினால் விளங்கப்பெறா.

ஐவகைச் சிலேஷ்மத்தின் காரியமாவது :—

1. கீல்களின் உட்புறத்திற்கு மழமழப்பு கொடுப்பதாம். (ஸந்திஸம்ச்லேஷணம்).
2. தேகத்திற்கு பசையைக் கொடுத்தல் (ஸ்நேஹநம்).
3. ஆரோக்கியமான பருமனல் போன்ற சதைவளர்ச்சிக் குதவுதல் (ரோபணம்).
4. தேகத்தின் பருமனை வளர்த்தல்(பூரணம்)
5. புதிய சவ்வுகள்கட்டுதல் (ப்ரும்ஹணம்).
6. தேகத்திற்கு இனிமையான உணர்ச்சி யூட்டுதல் (தார்ப்பணம்)
7. பலத்தை அபிவிருத்திசெய்தல் (பலகிருத்)
8. கைகால்களுக்கு உறுதியூட்டுதல் (ஸ்தைர்யகிருத்)—ஸுச்ருத ஸூத்திரம் XV.

வேதவிஹிதமான திரிதாதுவென்னும் ரோக லக்ஷண ஸித்தாந்தத்தையே மேற்கொண்டவராயினும்ஸுச்ருதர் அந்தவிஷயத்தைப்பற்றி தம் அபிப்பிராயத்தைத் தெளிவாய் வெளியிட்டிருக்கின்றார்; ஒரு ரோகத்திற்கும் சீர்கெட்டதொரு வாதபித்தகபத்திற்கும் அந்த ரோகத்திற்கு ஆதிகாரணமாயுள்ள ரோகஜனக அம்சங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் உண்மையானதன்றென்று அவர் சொல்லுகின்றார்; அவைகளுக்குச் சம்பந்தம் ஒருகால் இருந்தாலும் இருக்கலாம், இல்லாவிடினும் இல்லை என்பது அவருடைய அபிப்பிராயம். இந்த ரோக ஜனக தத்துவங்கள் சிறிதும் இடைஞ்சல் பண்ணாமல் தேகமுழுதும் வியாபிக்கக்கூடும்; அவை தங்குவதற்கு ஏற்றவிடம் ஒன்று ஏற்பட்டபொழுதுதான், தேகத்தில் தனிமையானதொரு பாகத்திலாவது சவ்விலாவது அவை

அமரும்பொழுதுதான் ரோகத்தைத் தூண்டி வளர்க்கும் அமிசங்களாகின்றன. "மின்னல், புயல், இடி, மழை என்னும் பௌதிகக் காட்சிகள், ஆகாயத்தை (மேகத்தை) விட்டுத் தனியே நிகழாவன்றோ? ஆயினும், மேகம் இருக்கையில் அவை சிலவேளை நிகழ்வதும் நிகழாதிருப்பதும் உண்டன்றோ?"

இரண்டொரு தத்துவங்கள் மேம்பட்டிருப்பதனால் மாத்திரமே அவசியமாய் வியாதியுண்டாக வேண்டுமென்று கொள்ளக்கூடாதென்பதை இந்த ஸித்தாந்தம் நன்கு விளக்குகின்றது. சுற்றுமுள்ள ஸந்தர்ப்பங்கள் பிரதிகூலமாயிருக்கையிலும் தேகத்தைச் சீரான நிலையில் வைத்துக் காப்பதற்குப் போதுமான ஜீவகலை மானிடதேகத்தில் அமைந்திருக்கின்றது. அப்படிப்பட்ட மாறுபாடுகள் அடிக்கடியுங் கடுமையாயும் உண்டானால் வியாதி உற்பத்தியாகின்றது. வியாதியை யேற்கும் குணம் சில தேகங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடுமென்பதையும் இந்த ஸித்தாந்தம்வற்புறுத்துகின்றது. அப்படி வியாதியேற்குந்தன்மை பரம்பரையினால் அந்த தேகத்திற்கு ஏற்பட்டிருக்கலாம். அல்லது அந்த தேகத்தையுடையவன் தானே தன்னுடைய வாழ்நாளில் ஸம்பாதித்துக் கொண்டிருக்கலாம். குடற்பூச்சிகள் ரோகத்தை உண்டுபண்ணுவனவல்ல. அவை குடல்களில் ஏராளமாய் இருக்கின்றன. ஆனால் அவற்றின் குணம் கெடுவதற்கு அனுகூலமான ஸந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது அவை தேகத்தின் சீர்குலைவுக்குள்ள காரணங்களுள் ஒன்றாய் ஏற்படுகின்றன. மற்றுமோர் உதாரணம் பாருங்கள்: குளிர்காற்று இருவர் மீது தாக்க, அவர்களுள் ஒருவனுக்கு ஜலதோஷம் பிடிக்கின்றது, மற்றவனுக்குப் பிடிக்கின்றதில்லை. இது அவனவனுடைய தேகம் ரோகத்தை எதிர்த்துத் தள்ளுவதற்கு வாய்ந்திருக்கும் சக்தியைப் பொருத்ததாகும்.

உண்மையில், வாத பித்த சிலேஷ்மமென்னும் மூன்று தாதுக்களின் ஏற்றத் தாழ்வுகளினால் ஆரோக்கியம் கெடாதவாறு எல்லாரும் தேகத்தைப் பழக்கிக்கொள்ளவேண்டுமென்று ஸுச்ருதர் விதித்திருக்கின்றார்.

இதுவரையில் எடுத்துக்காட்டிய விஷயங்களையெல்லாம் கவனிக்குமிடத்து, வாத பித்த சிலேஷ்மமென்னும் மூன்று தாதுக்களையும் மூன்று சக்திகளாகக் கொள்ளவேண்டுமேயல்லாமல், தேகத்து நரம்புகளிலும் இரத்த நாளங்களிலும் நிணநீர்க் குழல்களிலும் பாய்ந்தோடும் திரவ வஸ்துவெனக் கொள்ளக்கூடாதென்பது தெளிவாய் ஏற்பட்டது.

இந்தத் தாதுக்கள் தமக்குரிய வேறுவேறு குழல்களிற் பாய்ந்தோடுவதில்லை யென்பதற்கு நிச்சயமான சாக்ஷியம் இருக்கின்றது. சரகரும் ஸுச்ருதரும் பின்வருமாறு கூறுகின்றார்கள். "வாயுவையாவது பித்தத்தையாவது, கபத்தையாவது தனியே கொண்டுசெல்லத்தக்க ஸிரை (நரம்பு) தேகத்தில் ஒன்றேனும் இல்லை. ஆகையால் ஒவ்வொரு குழலின் வழியேயும் சரீரத்திலுள்ள எல்லாவகை தோஷங்களும் செல்லுவதற்குவேண்டிய அவகாசம் இருக்கிறதென்றே கொள்ளல்வேண்டும். ஆதலின் அவை 'ஸர்வவஹா:' (எல்லாம் செல்லும் வழிகள்) எனப்படுகின்றன."—ஸுச்ருத சாரீரம் VII. 12. ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் இதற்குப்பெயர் என்ன இருந்தபோதிலும், இந்தப்பெயர் தேகத்தில் ஒருவஸ்துவுக்கே பொருந்தும்; அதாவது நரம்புகளுக்கு மாத்திரமே பொருந்தும்.

சரகர் சொல்லுவது இதைவிடத் தெளிவாயும் தீர்க்கமாயும் இருக்கின்றது:— "தேகத்தில் ஒவ்வொருபாகத்திலும் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் வாத பித்த சிலேஷ்மங்களுக்கு எல்லாக்குழல்களும் கால்வாய்களே."—சரக—விமானம் VIII. முடிவாகப் பின்வரும் முக்கியமான வாக்கியம் இந்த விஷயத்தைத் தெளிவாய்த் தீர்மானிக்கின்றது:— "தேகத்தில் எல்லாப் பாகங்களிலும் குழல்கள் நிரம்பியிருப்பதினாலும், அந்தக்குழல்கள் தோஷங்

களின் ஏற்றத்தாழ்ச்சிகளிரண்டிற்கும் கால்வாய்களாய்இருப்பதனாலும், மனிதனெனப்படுபவன் குழல்களின் தொகுதியே என்று சில முனிவர்கள் கூறுகின்றார்கள்.''—சரக-விமானம், VI.

'நரம்புத் தொகுதியின் கிளைவகைகள் தேக முழுதும் இருக்கின்றன; அவையே மேற் குறித்த (தோஷங்களின்) 'ஏற்றத்தாழ்ச்சிகளை' ஏற்றுச் செல்லுகின்றன; இவ்விடத்தில் நல்லிரத்தநாளங்களும் மலினரத்தநாளங்களும் குறிக்கப்படவில்லை யென்பது திண்ணம்.

அடிக்கடி அங்கங்கே குறிப்பிடப்படும் திரவ 'ஓட்டம்' என்பதற்குச் சுலபமாய்ப் பொருள் கூறுவதரிதாகும். மானிடதேகத்தில் நிணநீர், இரத்தம் முதலிய திரவங்கள் அனேகம் இருக்கின்றன. அவை தத்தமக்குரிய குழல்களின் வழியே செல்லுகின்றன; நரம்பின்வழியே செல்லும் நரம்புச் சக்தியின் செலவை 'ஓட்டம்' என்றல்லாமல் வேறு விதமாய்ச் சொல்லுவதற்காகுமோ? இக்காலத்துச் சாஸ்திர கிரந்தங்களில் மின்சாரத்தைத் 'திரவவஸ்து' வெனக் குறித்துப் பேசி, அது செப்புக் கம்பியின்வழியே 'ஓடுகின்றது' என்கிறோமல்லவா?

'ஸ்ரோதஸ்' என்னும் சொல் நல்லிரத்த நாளங்களையாவது, மலினரத்த நாளங்களையாவது குறிக்குமென்று மொழிபெயர்ப்பவர்கள் சிலர் எண்ணுகிறார்கள். அது கால்வாய் எனவே பொருள்படுமென்று சரக விமானம். V. 3, காட்டும்: "பிராண ச்வாஸங்கள், நீர், அன்னரசம், இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, ஜீவவித்து, மூத்திரம், மலம், வியர்வை ஆகிய இவைகளை வகித்துக்கொண்டுபோவதற்குக் குழல்கள் இருக்கின்றன.

இந்த விஷயத்திற் கலக்கந்தரத்தக்க த்வந்த்வார்த்தார்த்தங்கள் நிரம்பியிருக்கின்றன. பொறுமையாய் ஆராய்ந்து பார்க்கில் உண்மை வெளிப்படுமென்று நம்புகிறோம்.

திரிதாது விஷய ஸம்பந்தமாய் விசித்திரமான ஸங்கதியொன்று சொல்லவேண்டியிருக்கின்றது. அதன் உண்மைப்பொருள் விளங்கின், திரிதாது ஸித்தாந்தம் ஏற்பட்டவகை தெளிவுறக்கூடும். அந்த விஷயத்தை மாத்திரம் இங்கு குறிப்போமேயல்லாமல், அதனின்றும் நாம் அனுமானிக்கத்தக்க விஷயங்களை இங்கே குறிக்கவில்லை. நாம் குறிப்பிடும் விசேஷ விஷயமாவது: இரத்தம் நான்காம் தாதுவென்று ஸுச்ருதத்திற் சில பாகங்களில் ஒவ்வோரிடத்திற் சொல்லப்பட்டிருப்பதேயாம்.

திரிதாது ஸித்தாந்தம் வெகுபுராதனமானது; கி. மு. 800-1000 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட ருக்வேத கீதங்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. முதன் முதலில் அது குறிக்கப்பட்டிருப்பது ருக்வேத ஸம்ஹிதை, 1. 3. 6. "த்ரியாதூ: ஸூர்யவஹதம் ஸாஹஸதீ." இதற்குப் பொருள் கூறுமிடத்து ஸாயனாசாரியர் எழுதியுள்ள வியாக்கியானமாவது:—

"வாத பித்த ஶ்லேஷ்யாதூ ந் த்ரியாவ ஶரீர விஷயம் ஸுகம் வஹதம்"

பிறகு, சரகஸம்ஹிதையில் இந்த ஸித்தாந்தமே கைக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஸுச்ருத ஸம்ஹிதையிலும் இதுவே கொள்ளப் பட்டிருக்கின்றதென்று நாம் நிச்சயமாக ஊகிக்கலாம். ஆனால் சரகஸம்ஹிதையைப் போலவே ஸுச்ருதமும் பிரகாசக ஸங்கலன பரிச்சேதங்கள் எய்தியிருக்கின்றது. அஃதாவது, அந்தக் கிரந்தத்தைப் பிற்காலத்தவர் திருத்தி ஒழுங்குபடுத்தி அநேக மாறுபாடுகள் செய்து புதுவிஷயங்களையும் சேர்த்து அமைந்திருக்கிறாகளென்பதாம்.

ஸுச்ருதத்தில் ஸூத்திர ஸ்த்தானத்தில் பதினைந்காவது அத்தியாயம (ஶோணித வர்ணநீயாத்யாயம்) இரத்தத்தைப்பற்றிச் சொல்வதாகும். இங்கே அஃது ஏழு தாதுக்களுள் ஒன்றாக விவரிக்கப்பட்டிருக்கிறது. 'தோஷங்களின' க்ஷீணபிவிருத்திகளைப்பற்றியும், 'தாதுக்களின்' க்ஷீணபிவிருத்திகளைப்

பற்றியும் விவரிக்கிற பதினைந்தாம் அத்தியாயத்தில் அவைகளை ஸம்பிரதாய முறைப்படியே கையாண்டிருக்கிறார். தேகத்திலுள்ள தாதுக்களின் தன்மையைப்பற்றி விவரிக்கும் 21-ஆம் அத்தியாயத்தில் ஸுச்ருதர் இரத்தத்தை, 'ஶோணித வ்யஂசமெயஉ௦, என்று நான்காவது 'தோஷமாக'ச் சேர்த்திருக்கின்றார். அந்த ச்லோகம் முழுவதையும் கவனித்துப் பார்ப்போம்.

'தேகாங்க அமைப்பில் வாயு, பித்தம், சிலேஷ்மம் என்பன மூன்றுமே அத்தியாவசியகமான மூலாம்சங்கள் எனக்கொள்ளவேண்டும். பிராணாதாரமான இம்மூன்று தத்துவங்களும் தேகத்தில் முறையே அடி-நடு-முடி யென்னும் மூன்றுபாகங்களில் நிலைகொண்டு விகற்பமில்லாத சொஸ்த ஸ்திதியைக் காக்கின்றன. மூன்று ஸ்தம்பங்கள் வீட்டைத் தாங்கிக்கொண்டிருப்பதுபோல, இம்மூன்று மூலதாதுக்களும் மானிடசரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தக்காரணத்தினால் சில கிரந்த கர்த்தர்கள் மானிடசரீரத்தை 'த்ரிஸத்தூணம்' என்கிறார்கள். சரீரத்தின் ஜீவதத்துவமானது இம்மூன்று மூலதாதுக்களின் ஸமநிலையைச் சார்ந்திருக்கின்றனவெனின், அவைகளின் நிலைகுலைவினால் சரீரம் குலைந்து சாவெய்தல் கூடும். இம்மூன்று தாதுக்களும், நான்காவதாகிய இரத்தமெனனும் தத்துவத்தோடுகூடித் தேகத்தை ஆக்கல், காத்தல், அழித்தல் எனனும் முத்தொழிலுக்கும் ஆதாரமாகிச் சாவெய்து மட்டும் தத்தம குணங்களைத் தேகமுழுதும் பரப்பி நிறகின்றன."

மேலே மொழிபெயர்த்துதகரித்த ச்லோகத்தில மூன்று தாதுக்களையும் ஆராய்ச்சி முறையாக விவரித்துரைத்து, அவைகளை 'த்ரிஸததூணம' என்று சொலலியும், கடைசி வாக்கியத்தில் நானகாம் அம்சமொன்றைக் கொண்டுவந்து ஸுச்ருதர் புகட்டியிருக்கின்றார். நான்காவது முககியாமசமாக இரத்தத்தைக் கொண்டுவந்து சேர்ததபினனும், அந்தக் கொள்கைக்கு இசைந்துபேசாமல் அவர் மூன்றுதாதுக்களைப்பற்றியே மறுபடி பேசுவதனால், இரத்தத்தை நான்காந்தாதுவாகக் கொண்டுவந்து சேர்த்தது இடையிடு (நிவேசிதலேகம், interpolation) என்றுநினைப்பதற்கு இடமேற்படுகின்றது.

---

## THE PROGRESS OF MEDICINE.*

## வைத்திய சாஸ்திராபிவிருத்தி.

By. T. W. MUSGROVE, M. D.

(*Sultan, Washington.*)

வைத்தியம் என்பது, மனிதரால் தமது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகத் தெரிந்துகொள்ளப்பட்ட விஷயங்களுள் ஒன்றாகும். ஆரோக்கியம் என்றால், ஜீவசக்தியினால் உழைனறசையும உடல் எனப்படும் இயந்திரமானது இயற்கைக்கு எள்ளளவும் மாறுதலின்றி தனது வேலையைச் செய்துகொண்டு வருவதேயாம். இச்சரீரமாகிய இயந்திரம் ஏதேனும் கோளாறடைந்தால், அதைத் திருத்தியமைத்து மீண்டும் தனது இயற்கை நிலைமையில் உழலும்படியாகச் செய்யுமுபாயமே வைத்தியமாகும். அநுபவ விசேஷங்களும் பரிசோதனை முறைகளும வைத்தியம் என்னும் விஷயத்தைக் கண்டறிந்தும் விருத்திசெய்தும் வந்திருப்பதாகக் கூறவேண்டும. மனிததேஹ அமைப்பானது மிகவும சிக்கலானது ; அதன தத்துவத்தை முற்றிலும் தொகுத்தறிந்து விடுவதென்பது எந்த மனிதனுக்கும் ஸாத்தியமில்லை என்பது இதுவரையில் அநுபவத்தில் வந்த விஷயம். தேஹத்தின் சிக்கலான அவ்வித அமைப்பை வியாதிகள் இன்னும் அதிக சிக்கலாகச் செய்துவிடுகின்றன. அமைப்பில் ஏதாவது சீர்குலைவு நேரிட்டால், அதை ஒழுங்குபடுததுவதறகு உபாயமொன்று அவசியமாக நேரிடவே அவ்வுபாயவிசேஷமே வைததியம் என்று வழங்கபபடலாயிற்று. ஆக

* Reproduced and translated from Western Medical Times"

வே வைத்தியம் அநுபவஸித்தமான விஷயமாகும். இவ்விஷயத்தை மேன்மேலும் கவனித்து ஒழுங்குபடுத்துவதற்காக அநேகம் பேர்களுடைய மதியும் மனமும் வேலைசெய்தன; அவர்களுடைய மனத்தினுடையவும் மதியினுடையவும் போக்குகள் பரிமிதமாகவும் பல வகைப்பட்டவையாகவும் இருப்பதால், அநுபவ விஷயமும் பலவகைப்பட்டவையாகவும், தத்துவங்களைக் கசடற விளக்கமுடியாதவை யாகவும் இருக்கின்றன. ஆனால் நுண்ணறிவும் அநுபவமும் கல்வியும் அமையப்பெற்றுள்ள வைத்தியர் உண்மையறிவதில் ஊக்கமும் உத்ஸாஹமும் உள்ளவராயிருப்பர்.

ஓங்கி உயர்ந்து பெருத்து அழகாய் அமைந்து ஆரோக்கிய நிலைமையிலுள்ள தேஹமும், களங்கமற்ற மூளையும், நல்ல ஞாபகசக்தியும், நிர்மலமான மனதும், தர்மகுணமும், தகுந்த கல்வியும், நல்லொழுக்கமுள்ள ஸாமர்த்திய சாலியான மனைவியும் ஒரு வைத்தியனுக்கு அமைந்திருந்தால், அவனுக்கு எவ்விடத்திலும் நற்பெயரும் தொழிலும் விருத்தியாகும். ஆனால் அவசியமான இவ்வித யோக்யதைகள் சிலருக்கே ஏற்பட்டிருக்கும்; பெரும்பான்மையோருக்கு முற்கூறிய யோக்யதைகளில் ஒன்றோ அல்லது அநேகமோ குறைவாயிருப்பது ஸஹஜமானதால், அவர்கள் தமது தொழிலை மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமின்றியே நடத்த முடியாதவராகின்றனர்.

பிணியாளிகள் கூட்டமாகப் போய் நிர்ப்பந்திப்பதால் அநேகம் வைத்தியர்கள் அப்பிணியாளிகளை சிகித்ஸைக்கு ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது; ஏதோ சிற்சில வைத்தியர்கள் மட்டும் வியாதியை நிர்த்தாரணம் செய்து சிகித்ஸையைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதற்கு சில பிணியாளிகளை மாத்திரமே தெரிந்தெடுத்துக்கொள்வார்கள்.

ஒரு ஸாதாரண வைத்தியரே ஜனங்களுக்குப் பெரும்பாலும் ஸாதாரண வியாதிகளுக்கு சிகித்ஸகராகவும், சஸ்திரசிகித்ஸகராகவும், ஸ்திரீகளுடைய வியாதிகளுக்கும் அவற்றிலும் முக்கியமாய் கர்ப்பாசய ரோகங்களுக்கும் விசேஷசிகித்ஸகராகவும், நேத்திரரோக வைத்தியர்களாகவும் இருந்துவருவதைக் காணலாம்; அத்தகைய வைத்தியர் மனஸ்ஸாக்ஷியின்றியே பல தவறுதல்களையும் குற்றங்களையும் செய்து, மனவுறுதியோடு அடாதவகையில் தொழில்புரிபவராவர்.

ஔஷதச் சரக்குகள் அக்னிக்கு ஒப்பானவை—நெருக்கடியான நிலைமையில் மட்டும் உபயோகிக்கத் தகுந்தவை—ஆனால் முறைதவறாமல் விஷயமுணர்ந்து பிரயோகிக்கப்படுமாயின் அடங்கி யொடுங்கி உழைக்கும் உத்தமமான ஊழியர்களுக்குச் சமானமானவையாம். உஷ்ணசூனியமான (கடுங்குளிர்ச்சியுள்ள) பிரதேசத்திலிருந்து முக்காற்பங்கும் விறைத்துப்போன உடலுடன் கொண்டுவரப்பட்ட ஒரு மனிதனை, ஓர் அறையில் காடாக்னியிட்டு அதன் அருகில் சிலநேரம் இருக்கச் செய்தால், அவ்வனலால் தேஹத்தில் இரத்தவோட்டம் எங்கும் ஒரளவாக ஏற்பட்டு, உடலின்மேலுள்ள சூடானது அதன் இயற்கை நிலைமைக்கு வந்துவிடும்; அம்மனிதனுனவன் கோளாறடைந்த உடற்சூட்டினால் ஏற்பட்ட (கடுங்குளிரால் விறைத்துப் போனதினால் ஆன) கஷ்டத்திலிருந்து நிவ்ருத்தியாகிறான். ஆனால் அம்மனிதனை (அவசியமானதற்கும் அதிகமாக) வெகுநேரமளவும் நெருப்புக்கு அருகிலேயே இருக்கச்செய்தால், அவனுடல் அழன்று எரிந்துவிடும், அல்லது சூடுதாங்காமல் அவன் ஏதேனும் ஒருவகையில் பிணியாளியாகவாவது ஆய்விடுவது நிச்சயம். எல்லா ஔஷதங்களும், உணவுகளும், ஸ்நானமுறைகளும், வேலைகளும் மிதமிஞ்சினால் நெருப்பைப் போலவே நன்மைக்குப் பதிலாகத் தீமைகளை விளைவிக்கும்

தன்மையுள்ளவையென்று அறிவீர்களாக. ஒரு சிகித்சையை ஆரம்பிப்பதற்கு எது ஸமயம் என்று அறிந்துகொள்வது எவ்வளவு அவசியமோ, அச்சிகித்சையை முடிப்பது எப்பொழுதென்று அறிந்துகொள்வதும் அவ்வளவு முக்கியமாகும்.

கடிகாயந்திரசில்பியானவன் ஒவ்வொரு கடிகாயந்திரத்தின் உள்ளமைப்பு வெளியமைப்புகளையும், அதுகள் வேலைசெய்யும் தன்மையையும் கசடற அறிந்திருப்பதுபோல நாமும் நமது தேஹத்தின் உள்ளமைப்புகளென்ன வெளியமைப்புகளென்ன இவற்றையும், தாதுக்கள் அனைத்தினுடைய இயற்கைவேலைகளென்ன உபயோகங்களென்ன இவற்றையும் உணர வேண்டுமானால் நமக்கு இன்னும் நான்குமடங்கு அதிகமான புத்திவன்மை வேண்டும். நாம் தெரிந்துகொள்ளவேண்டிய சரீரமாகிய இயந்திரத்தின் கட்டட அமைப்பும் அதன் அச்சு ஆணிகள் எனத்தகுந்த வெவ்வேறு அவயவங்களின் வேலைப்பாடுகளும் கடிகாயந்திரம் முதலியவற்றினும் எவ்வளவோ மடங்கு சிக்கலாக இருக்கின்றன. ஆகவே உடற்கூறுபாடு, தாத்வவயவங்களின் கிரியாகுணங்கள், மனஸ்தத்துவம், வியாதிநிதானம், ஔஷதமுறை என்னும் அவ்விஷயங்களின் உண்மைகளை நாம் முற்றிலும் அறிவதற்கு ஆசைகொள்ள முடியாதவராயிருக்கிறோம். ஆனால் மனித தேஹமாகும் இயந்திரத்தின் அமைப்பு என்ன, அதன் இயற்கையான கிரியாகுணங்களென்ன, அந்த இயந்திரத்தின் அமைப்பின் தன்மையிலோ, இரஸாயனமுறையிலோ, மானவிகத்தன்மையிலோ கோளாறடையும் வகைகளென்ன இவற்றின் ஸாதாரண தத்துவங்களையாவது நாம் ஸாத்தியமான வரையில் நன்றாகக் கற்றறிந்து தொழிலில் பிரவேசிக்கவேண்டும்.

அநேகம் நூற்றாண்டுகள் நாம் கண்ணும் கருத்துமாகக் கவனித்தும், பல காரணங்களால் வருந்தும் மனிததேஹங்களில் தற்செயலாகவும் வேண்டுமென்றும் ஆயிரக்கணக்கான பரிசோதனைகளைச் செய்தும், இன்னமும் வாகடவிதிகளின் ஸூக்ஷ்மங்களிலும், வியாதிநிவாரணமுறைகளிலும் நாம் அறிந்திருப்பது மிகவும் சொற்பமென்று சொல்லவேண்டிய நிலைமையிலேயே இருந்துவருகிறோம். இப்படி இருக்கையில் வைத்தியத்தில் பல முறைகள் மட்டும் ஏற்பட்டிருக்கின்றன. பலவித்மான முறைகளை ஒற்றுமைப்படுத்தி, உண்மையான சாஸ்திரமுறையில் நோக்கம் வைத்து, உத்தமமான ஒரு முறையை வித்தாந்தத்திற்குக் கொண்டுவரவேண்டியது கடமையென்று நினைத்திருப்பவரே வாஸ்தவமான வைத்தியராவார். ஆனால் அநேகம் வைத்தியர்களிடம் குருட்டுத்தனமான பிடிவாதமும் சுயநலம் பாராட்டும் தன்மையும் குடிகொண்டிருப்பதால், இவர்கள் எவ்விதத்திலும் வேற்றுமையின்றி மனமொப்பி ஐகமத்தியமடைய இன்னும் அநேகம் ஆண்டுகள் செல்லும். ஆகிலும் இதுவரையில் முற்போக்குக்கு அவசியமான சிற்சில முயற்சிகள் நடந்தேறியிருக்கின்றன. இந்த நூற்றாண்டில் இன்னும் அதிகமான முயற்சிகள் செய்யப்பட்டு, எல்லாத் தேசத்து வைத்தியமுறைகளும் ஒருமிக்கச் சேர்ந்து உலக நன்மைக்கு உபயோகப்படக் கூடியவையாய் அமையும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

---

## கறியுப்பால் கீழ்க்குடலிலுள்ள கிருமிகளை அழித்தல்.

ஒரு தேக்கரண்டியளவு கறியுப்பை இரண்டு பங்கு வென்னீரில் கரைத்து, இளஞ்சூடாயிருக்கையில் ஆஸன த்வாரத்தின் மூலமாய் இரவில் படுக்கப் போகையில் உட்செலுத்தி விடவும். இவ்விதமாய் மூன்று அல்லது நான்கு தினங்கள் வரிசையாக அந்த நீரைப் பிரயோகித்தால், கிருமிகள் அழிந்து விடுகின்றன.

# வைத்திய கலாநிதி.

நளஹூ மாசி—பங்குனிமீ.

## MEDICAL MEN AND PUBLIC HEALTH.

## வைத்தியத் தொழிலாளிகளும் பொதுஜன சுகாதாரமும்.

பிணியினல் பெரிதும்வருந்தும் இந்தியாவைப் போன்ற தேசத்தில், வைத்தியத்தொழில்புரிபவருடைய கடமைகள் மிகவும் மேலானவை. பதினேழுவது எல்லா இந்திய ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்ஸ் கான்பரென்ஸ் நடந்தேறுகையில், மிஸ்டர் எ. எம். வி. முதலியார், எல். எம். பி. அவர்கள் "வைத்தியத்தொழிலாளிகள் பொதுஜன சுகாதாரத்தைக் கவனிக்கவேண்டியதின் கடமை" யென்பதைப்பற்றி செய்த பிரஸங்கமானது பொதுஜனநன்மையில் ஊக்கமும் கருணையுமுள்ள ஒவ்வொரு நாகரிகம்வாய்ந்த மனிதனுலும் குறிப்பிடக்கூடிய அபிப்பிராயங்கள் அடங்கியதாம். "ஒவ்வொரு கிராமத்திலும், ஜனங்களுக்கு ஸாத்தியமானவரையில் சுகாதாரமுறைகளில் அறிவையும் ஊக்கத்தையும் ஊட்டவேண்டும்; அவ்விதமே மனஸ்ஸம்ஸ்காரமென்ன, நடத்தைகளைச் சீர்திருத்துவதென்ன, சரீரப் பயிற்சியென்ன இவைகளிலும் ஜனங்களுக்கு நல்ல போதனைகளைச் செய்வதற்கு வைத்தியத்தொழில் செய்பவர் தகுந்த குருமார்களாயிருப்பர்." என்பது அவருடையப் பிரஸங்கத்தின் ஸாராம்சமாகும். டாக்டர் முதலியார் அவர்களின் சிலாகிக்கக்கூடிய உத்தமப்பிரஸங்கத்தின் உபயோகமுள்ள கொள்கையை வைத்தியர்கள் யாவரும் கவனித்து அதன்படி தமது கடமையைச் செலுத்துவார்களானல், அதைவிட உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மை வேறொன்றுமில்லை.

வைத்தியத்தை மேனாட்டு முறைப்படி கற்றறிந்தவர்கள் தமது பரீக்ஷையில் தேறியதும் தம்மை தைவப்பிறப்பென்றே பெரும்பாலும் கருதுபவர்களா யிருக்கிருர்கள். அவர்களுடைய மனதில் உடனே பேரவாக்களும், பணம் ஸம்பாதிப்பதில் பேராசையும் குடிகொண்டு விடுகின்றன. பலவிதமான பிணிகளால் பீடிக்கப்படும் ஏழை ஜனங்களுக்கு வியாதி நிவாரண விஷயத்தில் தம்மால் இயன்றவளவு உதவி செய்வதை இவ்வைத்தியர்கள் கடமையாகப் பாவிப்பதே யில்லை. ஒருவன் உண்மையான வைத்தியனயிருப்பானனல், அவன், தொழில் புரியும் நோக்கமுள்ளவனுகவாவது, வியாதிக்ரஸ்தர்களைப் பார்த்து பரீக்ஷை செய்பவனுகவாவது, ஔஷதங்களை எழுதிக்கொடுப்பவனுகவாவது மட்டும் இருக்கக்கூடாது; ஆனல் ஆங்காங்கு சுகாதாரமுறைகளைப் பரவச்செய்வதை விரதமாகப் பூண்டவர்களாகவும், இயற்கை நிலைமை தவருது ஜனங்கள் நீடித்தகாலம் உயிர்வாழ்வதற்குத் தகுந்த உபாயங்களை உபதேசிக்கும் உபாத்தியாயர்களாகவும் இருந்துவரவேண்டியது அவசியம். தேசத்தை ஆரோக்கியநிலைமையில் வைத்துக் காக்கவேண்டியதில் இவ்வைத்தியர்களே பொருப்பாளிகள் ஆவார்கள். தேசத்திலுள்ள புருஷர்களும் ஸ்த்ரீகளும் ஆரோக்கியமும் தேஹவலிமையும் பெற்று சுகமாய் வாழ்வதற்கு அநுகூலமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதும் அவர்களுடைய கடமையாகும். வைத்தியரல்லாத மற்ற ஜனங்கள் முற்கூறிய உதவிகளை இவ்வைத்தியர்களிடமிருந்து பெறுவதற்கு தாராளமாய் பாத்தியதை கொண்டாடலாம். அனைவருக்குமே தர்மவைத்தியம் செய்யவேண்டுமென்று நாம் வற்புறுத்துவதாக நினைக்கவேண்டாம்; ஆனல் நாம் சொல்லுவதெல்லாம் என்னவென்றல், ஒவ்வொரு வைத்தியரும் அவரவரால் இயன்றவளவு பொதுஜனங்களுடைய சுகாதாரத்தின் அபிவிருத்தி

யில் சிரத்தையுள்ளவரா யிருக்கவேண்டு மென்பதே. சுதந்தரமாக வைத்தியத்தொழில் புரிபவர் பெரும்பாலும் ஏராளமாகத் திரவியம் ஸம்பாதித்து, மனக்கவலையின்றி சுகவாழ்க்கையை அநுபவிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தமது வாழ்நாட்களில் வேறு சில நூதனமான முயற்சிகளையும் கைப்பற்றும்படி அவர்களுக்கு அதிகாரிவர்க்கத்தாரும் அறிவிக்க வேண்டும். இத்தொழிலாளிகள் பொதுஜனங்களுக்கு நன்மை புரியவேண்டிய விஷயங்களை ஆலோசிக்கவும், நிறைவேற்றவும், ஊழியம் செய்யவும் கருத்துள்ளவர்களா யிருக்கவேண்டும்; அவர்கள் பணத்தைப் பெரிதாகப் பாவிக்காமல், தர்ம சிந்தையையும் கௌரவத்தையும் மேலாகப் பாவிக்கவேண்டும். வியாதிக்ரஸ்தர்கள் தமதிடம் ஏராளமாய் வந்து சிகித்ஸை பெறவேண்டுமென்று ஆசைகொள்ளாமல், அனைவரும் ஆரோக்கிய நிலைமை தவறாமல் வியாதிவராத மார்க்கங்களை அநுஸரித்து நடக்கும்படி ஜனங்களுக்கு உபாயங்களைக் கற்பிப்பதிலேயே கருத்துள்ளவர்களாயிருந்துவர வேண்டுமென்பதே எமது வேண்டுகோள். தேசத்தில் அளவற்ற ஜனங்களுடைய உயிர்களைக் கொண்டுபோகும் கொள்ளைநோய்களான விஷூசி, விஷமஜ்வரம், மஸூரிகை, சீதபேதி முதலியவை யாவும் தடுக்கக்கூடிய வியாதிகளேயாகும்.

வியாதிகள் வராமல் தடுக்கும் வேலை வைத்தியர்களுக்குமாத்திரம் ஸாத்தியமானதென்று சொல்லமுடியாது. அது வைத்தியரல்லாதவர்களாலும் ஆகவேண்டிய காரியம். ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வதென்பது அவரவருடைய ஸொந்த காரியமேயன்றி வைத்தியருக்கு மாத்திரம் ஸம்பந்தப்பட்டதாக மாட்டாது. ஒவ்வொரு மனிதனும் அதற்காகச் சிறிது ஊக்கமும் முயற்சியும் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். ஆனால் வைத்தியரல்லாத ஜனம் சுகாதாரமுறைகள் இத்தகையவையென்று அறியார்; வீதியில் செல்லும் ஒவ்வொரு மனிதனும் வியாதியை வெல்லுவதெப்படியென்று அறியவல்லவன் அல்லன். மிஸ்டர் ப்ராங்க்லாண்ட் (Frankland) என்பவர் கூறுவதாவது :—"எப்பொழுது துஷ்ட விலங்குகளிடமிருந்து தன்னைத் தப்புவித்துக் கொள்ள வேண்டுமென்று மனிதன் யோசித்திருந்தானோ, அப்பொழுது அவன் மிகவும் நாகரிகமாக வாழ்வதற்கு முதலில் கற்கவேண்டும். இன்றைக்குதான் மனிதன் தன்னை நுண்ணுயிர்களிடமிருந்து (microbes) காப்பாற்றிக்கொள்ளும் உபாயங்களைக் கற்றுவருகிறான். விலங்குகளை வெல்லுவதற்கு நாகரிகம் இன்றியமையாததாயிருப்பதுபோல நுண்ணுயிர்களிடமிருந்து தப்புவதற்கும் நாகரிகம் அவ்வளவு அவசியமானது. இன்றைக்கு பெர்லின், லண்டன், பாரிஸ் இந்த நகரங்களில் ஸர்ப்பவிஷத்தினாலாவது, சென்னாய்களின் பற்களாலாவது, வேறு எந்த துஷ்ட விளங்குகளாலாவது எவரேனும் தீண்டப்படுவதுண்டா? இல்லவே யில்லை. ஏன்? அந்த நகரங்களின் நாகரிகமே அதற்குக் காரணமாயிற்று. அந்த நகரங்களில் களார்புதம் (diphtheria), ஸந்நிபாத ஜ்வரம், விஸர்ப்பஜ்வரம், விஷூசி, க்ஷயம் இந்த வியாதிகளால் மனிதன் ஒருவன்கூட உயிர் துறக்காம லிருக்கக்கூடிய காலமும் வரப்போகிறதென்பதை சாஸ்திரஞ்ஞர்கள் எதிர் பார்க்கிறார்கள்."

கொடிய விபத்துக்களை விளைவிக்கும் நுண்ணுயிர்களுடன் போராடி அவற்றை வெல்லுவதற்கு ஜனங்கள் தயாராயிருந்தால் (நாகரிகமுள்ளவராயிருந்தால்), அப்போர்வீரர்களை ஏற்றவழியில் செலுத்தி, ஜயமுண்டாகச் செய்வதற்கு வைத்தியர்கள் முக்கியமான தளகர்த்தர்களாக அவர்களுக்கு முன்னின்று உபாயங்களையெல்லாம் உபதேசிப்பார்கள். மனிதர்களுடைய சுகாதாரத்தின் நிமித்தம் நுண்ணுயிர்களாகும் கொடிய சத்துருக்களோடு போர்

புரிந்து வெற்றிபெறும் வழிகளைக் காட்டுவதற்கு ஏற்றவர்கள் வைத்தியர்களேயாவர்.

நல்ல ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு அவசியமான விதிகள் வெகு சொற்பம். அவை எளிதில் நிறைவேற்றக் கூடியவை; அவை இயற்கையில் அமைந்த அருமையான விஷயங்கள்:—சுத்தமான வாயு, நிர்மலமான ஜலம், நல்ல வெளிச்சம், சுத்தமும் ஸாதாரணமுமான உணவு, தகுந்த வியாயாமம், மனது மகிழ்ச்சியும் அமைதியும் பெற்றிருத்தல்; இவை யாவும் சுகவாழ்க்கைக்கு அவசியமானவை. இந்த விஷயங்களை அடிக்கடியும் ஜனங்களிடம் பிரஸ்தாபிப்பது, வைத்தியசாலைகளை ஸ்தாபிப்பதிலும் மேலான உதவி செய்வதாகும். வியாதிகள் உண்டாவதற்குக் காரணங்கள் என்ன? அவைகளை முன்னதாகத் தடுப்பது எப்படி? எப்படி ஜீவிப்பது? ஒவ்வொருவனுடைய வீடும் எவ்விதமாயிருக்கவேண்டும்? அதன் அக்கம்பக்கங்களை எப்படிப் பாதுகாக்கவேண்டும்? எவ்வித உணவை எவ்வெப்பொழுது உபயோகிக்கவேண்டும்? வியாயாமம் செய்வதெப்படி? இவையெல்லாம் வைத்தியர்களால் விஸ்தாரணம்செய்து உபதேசிக்கப் படவேண்டிய தினசரி சுகாதார விதிகளாகும். ஜனங்கள் வியாதியின்றி, ஆரோக்கிய நிலைமையைப் பெற்று, தேஹவன்மையிலும் மனோவன்மையிலும் மேன்மையடைந்து, மிகவும் தீர்க்காயுளைப் பெற்று வாழ்வதற்கான உபாயங்களை அறிவிப்பதற்கு வைத்தியர்களே உபாத்தியாயர்களாகவும் உபதேசகர்களாகவும் இருக்கிறார்கள்.

வியாதியினால் வருந்தும் இந்தியாவின் ஹிதத்தின் நிமித்தம், அநாகரிகத்தில் ஆழ்ந்த இத்தேசத்திய கிராமங்களின் கஷ்ட நிவ்ருத்தியின் பொருட்டு, அபரிமிதமான ஜனக்கூட்டம் அடர்ந்த இத்தேசத்திய நகரங்களின் நன்மையை உத்தேசித்து, ஆரோக்கியமின்றி ஆறுதலின்றி பரிதவிக்கும் பரம ஏழைகளான இத்தேசத்திய ஸ்த்ரீ புருஷர்களுக்காக - நாம் நமது வைத்திய நண்பர்களை முற்கூறிய முயற்சிகளில் இயன்றவளவு ஊக்கமெடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆவலுடன் வேண்டிக்கொள்கிறோம். வைத்திய வித்வான்களே! நீங்கள் தொழில்புரிந்து திரவ்ய ஸம்பாதனம் செய்வதில் ஆவலுள்ளவராயிருப்பது போலவே நமது தேசத்து ஏழை ஜனங்களுடைய சுகாதாரமுறைகளைக் கவனிக்கும் விஷயத்தில் மேலான சிரத்தையெடுத்துக் கொள்வதற்கு முற்றிலும் கடமைப்பட்டவரா யிருக்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள்.

---

## FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

(முன் தொடர்ச்சி.)

அக்ஷகாஸ்த்தியின் முறிவு:—அக்ஷகாஸ்த்தி எனப்படும் காறை யெலும்பு ஒடிந்துபோனால் அடியில் வரும் குறிகளைக் காணலாம்: அம்மனிதன் கையை உயர சிரஸ்ஸின் பக்கமாகத் தூக்கமுடியாது. எலும்பின் ஒடிந்துபோன பாகம் மேலுக்குக் காணப்படும்; அந்த பாகம் மேலே தூக்கி ஏறகும். தோளை அசைக்கும்போது எலும்பின் ஒடிந்த முனைகளில் அதிகமான வலியுண்டாகும். மனிதன் விழும்போது முழங்கையையும் முழங்கைக்குக் கீழுள்ள கரத்தையும் தரையில் பலமாகத் தாங்கிக்கொள்வது ஸஹஜமாகையால், அப்பொழுது அக்ஷகாஸ்த்தி ஒடிந்துவிடுகின்றது. இந்த அபாயம் சிறுவர்களுக்கு விசேஷமாய் ஸம்பவிப்பது வழக்கம்.

சிகித்ஸை:—முதலில், குவிந்த சிறு தலையணையைப்போன்ற ஒரு மெத்தையை அக்குளில் வைத்து, தோள்களை பந்தனம் செய்யவும்; அப்பொழுது அவ்வவயவங்கள் நன்றாகப் பின்புறமாயிழுக்கப்படும். இந்த பந்தனத்துணியை அநேகந்தடவை இரண்டு தோள்களிலும் குறுக்கும் நெடுக்குமாகவும், அநேகந்தடவை சுற்றிச் சுற்றியும் எண்குறிமண்டலபந்தனத்தைப் (figure of eight bandage) பிரயோகிக்கவேண்டும். பிறகு மற்றொரு வஸ்திரத்தினால் கையை முழங்கைக்கு மேலாகப் பக்கவாட்டில் நன்றாகக் கட்டிவிடவேண்டும். இறுதியில் ஒரு கைக்குட்டையினால் முழங்கைக்கும் கழுத்துக்கும் ஏந்தானம் இட்டு பந்தனம் செய்து முடிக்கவேண்டும். பந்தனங்களை அமைக்கும்போது, அவை ஒவ்வோர் இடத்தில் நழுவிவிடக் கூடுமாகையால், அவ்விடங்களில் தைத்துவிடுவது நலம். இந்த பந்தனத்தை ஒருமாத காலத்திற்குக் குறையாமல் பிரயோகித்து வைத்திருக்கவேண்டும்.

அதன் பிறகு சிலநாள் வரையிலும் ஒட்டுச் சீலைகளை அவ்விடத்தில் பிரயோகித்துவரவும்.

பிணியாளியானவன் மல்லாந்துப் படுத்துக்கொண்டு, கைகளை தேஹத்தின் பக்கவாட்டில் நீட்டிக் கொண்டு, சிரஸ்ஸை அசைக்காமல் ஒரே நிலையில் நிறுத்தி அமைதியாயிருந்தாலேயொழிய, ஒடிந்து போன அக்ஷகாஸ்த்தியை சரியான நிலைமையில் சலனமின்றி அமர்த்திவைப்பது மிகவும் கஷ்ட ஸாத்தியம். ஸ்திரீகளுக்கு இவ்வபாயம் நேரிட்டதானால், ஒடிந்து போன அவ்வெலும்புக்கு ஒழுங்கீனம் உண்டாகாமலிருப்பதற்காக, ஒடிந்த முனைகள் நன்றாக ஒன்றுகூடும்வரையில் மூன்று வாரங்களுக்குக் குறையாமல் சார்மணைபோன்ற மெதுவான படுக்கையில் அவர்கள் சாய்ந்து படுத்திருக்கவேண்டும். ஆனால் இந்த அபாயத்திற்காக அவ்வளவு நாட்கள் வரையில் படுக்கையிலேயே இருந்து வருவதற்கு அநேகமாய் பிணியாளிக்கு மனம்பிடிக்காது. மேலே கூறியபடி பந்தனம் செய்யும் பக்ஷத்தில், ஒடிந்துபோன அக்ஷகாஸ்த்தியானது சீக்கிரமாகவும் உறுதியாகவும் ஒன்றுகூடுமானாலும், சிறிதளவு அவ்விடத்தில் ஒழுங்கீனம் ஏற்படக்கூடும்.

ஹநுவஸ்த்தியின் முறிவு :—முகவாய்க்கட்டை எலும்புக்கு ஹநுவஸ்த்தியெனப் பெயர் என்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது. தவடையின் கீழே ஒரு பாரிசத்தில் இந்த எலும்பு சற்றேறக்குறைய நடுவில் ஒடிந்துபோவது வழக்கம். இந்த எலும்பில் பற்கள் அமைந்திருப்பதால், இது ஒடிந்ததால, பற்களின் வரிசை ஏற்றக் குறைவாகக் காணப்படும; அதாவது—முன் பற்கள் கீழ்ப்பாகமாகவும், கடைவாய்ப் பற்கள் மேற்புறமாகவும் நிற்கக்காணும; அப்படி ஒழுங்கீனப்படுவது தசைநார்கள் எலும்பை முன்னுக்குப் பின் முரண்டு இழுப்பதால் ஏற்படுகின்றது. எலும்பு ஒடிந்துள்ள பாகம் கைக்கு எளிதில் புலப்படும்; உமிழ்நீர் துளித்துளியாகப் பெருகும்; முகவாய்க் கட்டையை அசைத்தால் அதிக வலியுண்டாகும். இந்த எலும்பின் முறிவு ஸந்நிபாதாஸ்ததி பங்கமாயிருந்தால், ஈறுகள் சிதைவுறுவதால் இரத்தப் பெருக்கும் உண்டாகும்; பெரும்பாலும் சில பற்களும் பெயர்ந்துவிடலாம்.

சிகித்ஸை :—பற்கள் ஸாதாரணமாய் ஆட்டங் கொண்டிருந்தால், அவற்றை அப்படியே விட்டுவிடலாம், அல்லது அவற்றை அதனதன் ஸ்த்தானத்தில் அமைத்து வைத்துவிடலாம்; இவற்றை மெலலிய வெள்ளிக்கம்பிகளால் பக்கத்துப் பறகளோடு சேர்த்து இணைத்துவிடலாம். பற்கள் இடம் விட்டுப் பெயர்நது இருந்தால் அவற்றை விலக்கிவிடுவதே நலம. (இவற்றில் கைதேர்ந்த சாஸ்திர சிகித்ஸகரே அதிகாரியாவர்.) ஒடிந்துபோன எலும்புச் சக்கைகள் அவ்விடங்களில இருந்தால், அவற்றையும் வெளிப்படுத்தி விடவேண்டும. இதன பிறகு பறகளை ஒரே ஒழுங்கான வரிசையில் இருக்குமபடி, ஒடிந்துபோன எலும்பைச் சரிப்படுத்தி அமைக்கவேண்டும். (இந்த ஸமயத்தில் முகவாய்க்கட்டையில் மயிர்கள் வளர்ந்திருந்தால் அவற்றை க்ஷௌரம் செய்துவிடவும்.) பிறகு ஒரு துண்டு கட்டாபர்ச்சாவையாவது கனமாக மாவைப் பரப்பித்தடவிய வஸ்திரத்தையா (மாச்சீலையையா) வது ஒரு காதிலிருந்து மற்றொரு காதுவரையில் நெடுகவும் வளைவாக வைத்து, எலும்பு ஒழுங்காகக் கூடும்விதமாய் ஒட்டிவிடவும்; முதலில் இவற்றை வெந்நீரால் மிருதுவாக்கவும்; நான்கு முனைகள் உள்ள பந்தன வஸ்திரத்தினால் கட்டாபர்ச்சா.அல்லது மாச்சீலையை மூடிக்கட்டவேண்டும். (சுமார் $1\frac{1}{2}$-கஜம் நீளமும், 4-அங்குலம் அகலமும் உள்ள வஸ்திரத்தை நடுவில் 8-அங்குலம் துணியை விட்டுவிட்டு, இரண்டு முனைகளையும் இரண்டு பகுதிகளாகக் கிழிக்கவேண்டும; இந்தத் துணியின் நடுவில் ஒரு சிறிய த்வாரம் விடவும்; இதில் முகவாய்க்கட்டையின் முனை பிரவேசித்து நிற்கும்; இந்த த்வாரத்தின் முன்பக்கத்து ஓரம் ஒரு அங்குலத்திற்கும் குறைவாக விடப்பட்டால, உதட்டிலாவது வாயிலாவதுவஸ்திரம் சேராமல் உதட்டுக்குக் கீழேயே நிற்கும்.) நான்கு வால்களைப்போன்ற முனைகளுள் இரண்டு முனைகளை யெடுத்து சிரஸ்ஸின் உச்சியில் முடிந்துவிடவும்; மற்ற இரண்டு முனைகளையும் கழுத்தின் பின்புறத்தில் இழுத்து முடிந்துவிடவேண்டும. தலையின் உச்சியில் மற்றொருபந்தனவஸ்திரத்தின் மத்திய பாகத்தை வைக்கவும்; அதன் ஒரு முனையைக் காதுக்கு மேற்புறமாகக் கொண்டுவந்து, முகவாய்க்கட்டையின் கீழாய் மற்றொரு பக்கத்துக்குக் கொண்டுபோய், கழுத்தின் பின்புறமாகப் போகும் வஸ்திரத்தைக் குறுக்கிடுமிடத்தில் ஊசியினால் தைதது விடவும்; இவ்விதமே மற்றொரு முனையை இரண்டாவது காதின் மேற்புறமாகக் கொண்டுவந்து, மற்றொரு பாரிசத்தில் தைத்துவிடவும்; இவ்விதம செயவதால் பந்தனம் எளிதில் அசைந்து அவிழ்ந்துவிடாமல் நிற்கும்.

அவ்விதம் முகம் மூடப்பட்டிருக்கிற நிலைமையில, வாயை ஒரு சிறிதும் திறக்கமுடியாதாகையால், ஒரு ரப்பர்க் குழாயை, அடிபடாத தவடையின் பக்கமாய், வாயின் ஓரத்தில் மெதுவாக நாக்கின் அடிப்புறம் வரையில் நுழைத்து, அதன் மூலமாய் முற்றிலும் திரவமான ஆஹாரத்தையே இரண்டு வாரங்கள் வரையில உட்செலுத்தவேண்டும்; அல்லது ஒரு ரப்பர்க் குழாயை, மூக்கின் வழியாகத் தொண்டை வரையில் நுழைத்து அதன் மூலமாகவாவது திரவமான உணவை இரைப்பையினுள் அவ்வளவு நாள்வரையில் செலுத்தி வரலாம. இந்த அஸ்ததிபங்கம் ஸ்வஸ்த்தமாகச் சற்றேறக்குறைய ஐந்து வாரங்கள் செல்லும. வாயில உமிழ்நீர் சொட்டிக்கொண்டிருப்பதும், வாயில் ஒருவித துர்வாஸனையுடன் கூடிய ஏதோ விகாரமான ருசியும் பிணியாளிக்கு மிகவும் அருவருப்பை யுண்டு பண்ணும. இதற்கு காண்டீஸ் ப்ளூயிட் (condy's fluid) என்னும் திரவத்தையும் இரண்டு மூன்று துளிகள் கார்பலிக் ஆஸிட்டையும் கலந்து, குழாயின் மூலமாகவே வாயைக் கழுவி வரலாம்.

# DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### முருக்சமரம்.

இது மிகப் பெரிதுமல்லாமல் சிறிதுமல்லாமல் நடுத்தரமாயுள்ள மரம்; இது முளைத்த வெகு சீக்கிரத்தில் கொழிசாகப் பெரிதாய் வளர்ந்துவிடும்; சிறிய செடியாயிருக்கும்போது முள்ளுகள் களைத்திருக்கும்.

(1) இதன் இலைகளை இடித்துச் சாறு பிழிந்து, அச்சாற்றை வயிற்றுக்கிருமிகளை அழிக்கவும், மலத்தைக் கழிக்கவும் இரண்டு பலம் அளவாகக் கொடுக்கலாம். (2) நரம்பைப்பற்றிய காதுவலியையும், அதே விதமான பல் வலியையும் நிவ்ருத்தி செய்ய இதன் சாற்றைக் காதில் ஊற்றலாம்; பற்களின் அடியில் தேய்க்கலாம். (3) இதன் இலைகளைக்காலிடுக்கு முதலான விடங்களில் உண்டாகும் கிரந்திவீக்கத்திலும், இரத்தக்கட்டி முதலிய வீக்கங்களிலும் வதக்கி வைத்துக் கட்டலாம். (4) இந்த மரத்தின் பட்டைக்கு விசேஷமாய் பித்தஹரமும் ஜ்வரத்தைத் தணிக்கக்கூடியதுமான குணம் உண்டென்றும் தெரிய வருகிறது. (5) இந்தப பட்டையின் உட்புறத்தில் நெய்யைத் தடவி, ஆமணக்கெண்ணெய் விட்டு எரியும் விளக்கின் ஜ்வாலைக்குமேல் அதைக் சற்றுநேரம பிடித்திருந்து, அதிற்படியும் மையை எடுத்து கண்களில் எப்பொழுதும் நீர்வடியும் வியாதியில் இறெப்பையினுள் தடவி வந்தால் குணமுண்டாகும் என்றும் சில வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

---

### வெள்ளை ஊமத்தை.

இச்செடி இந்தியாவில் உஷ்ணப் பிரதேசங்களில் எங்கும் ஏராளமாகப் பயிராகும். இது ஸாதாரணமாய் இரண்டு மூன்று அடி உயரத்திற்குமேல் வளருவதில்லை. புஷ்பம் வெளுப்பாயும் வெளிப்பக்கத்தில மட்டும் சிறிது ஊதா நிறமாகவும இருக்கும்; இதன் காய்கள் பந்துபோல் வர்த்துளமாயும முட்கள் அடர்ந்தவையாகவும் இருக்கும்.

இது தேஹத்திற் செய்யும் வேலையானது, பெல்லடோனா என்னும சரக்கின் வேலைக்குக் சமானமாயிருக்கிறது. இதை சூலப்பிரசமநமாகவும் (anodyne), ஆக்ஷேபகஹரமாகவும (antuspasmodic), நித்திராஜநகமாகவும உபயோகப்படுகிறது. இதை சவாஸ ரோகத்தில் முக்கியமாய உபயோகிக்கலாம். இதன் இலைகளையும் காம்புகளையும் நிழலில உலர்த்துமபடுத்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டி, புகையிலையைப் போலவே, ஒரு ஊது குழலில் வைத்து, அதிலிருந்து வரும் புகையை சுவாஸ ரோகத்தில் உறிஞ்சலாம். இவ்விதம் உபயோகிப்பதால், அநேகம் ச்வாஸ ரோகிகளுக்கு வெகு சீக்கிரத்தில் ஸௌக்கியமுண்டாவது அநுபவஸித்தம. சிலருக்கு இதன் இலைகள் உபயோகமில்லாமற்போனால், இதன விதைகளை உலர்த்தியெடுத்து முன்போலவே உபயோகிக்கலாம். உலர்த்தியெடுத்த இக்சரக்கை 10-முதல் 20-நெல்லெடை வரையில் உபயோகித்தால் போதுமானது; அதற்கு மேற்பட்டு உபயோகித்தால், மயக்கம், ஏதோ ஒருவிதமான அநாரோக்கியக்குறி, மற்றும் ஏதாவது திருப்தியில்லாத விகாரங்கள் இவற்றை யுண்டுபண்ணும். நாட்பட்ட இருமலில், அது மிகவும் தீவ்ரமான வேகத்தோடு ஸம்பவிக்கையில், இந்தப் புகையைப் பிடித்தால்உடனே அவக்குறிகள் தணிந்துவிடும். ஆமவாதம் என்னும் கீல்வாயுவில் கணுக்களில் வலியும் வேதனையும் அதிகமாய்விட, வீக்கமும் அதிகரித்திருந்தால் அந்த நிலைமையிலும், நோக்காடு அதிகமான அர்புதம் என்னும்புரைகுழல் அல்லது வீக்கங்களிலும், மேஹப் புண்களிலும் வெள்ளை ஊமத்தையை மேலுக்கு வதக்கிப்போட விசேஷமாய் ஸௌக்கியமுண்டாகும். ஸ்த்ரீகள் மாதவிடாயாகும் காலத்தில் ஊமத்தையிலையை அல்லது விதைகளைக்கொண்டு மேலே பற்றுப்போட்டால் வேதனை நிவ்ருத்தியாகும்.

---

### நீலாஞ்ஜனமும் கலா - ஆஸார் ஜ்வரமும்.

நீலாஞ்ஜனத்தை உபயோகித்து கலா - ஆஸார் (காலஜ்வரம்) என்னும் கொடிய வியாதியினால் வருந்திய அநேகம் பிணியாளிகள் ஸ்வஸ்த்தம் செய்யப்பட்டனர். என்று டாக்டர் உபேந்திரநாத் பிரம்மசாரி, M. A., M. D. P. H. D. என்பவர் கூறுகிறார்.

இவர் தன்னுடைய சிகித்ஸாக்கிரமத்தை நான்கு விதமான வெவ்வேறு முறைகளில் பிரயோகித்தார். ஒரு வகுப்பான கேஸுகளில், அவர், பசையுருவமாகச் செய்த நீலாஞ்ஜனத்தை விரைகளென்னும் காரிரத்தகுழாய்களின் மூலமாய் (intravenously) உட்செலுத்தினார். இரண்டாவது வகுப்பான கேஸுகளில் டார் டார் எமிடிக் என்னும் வாந்தியுப்போடு, ஸோடியம் டார்டரேட் ஸம்பந்தமுள்ள நீலாஞ்ஜனத்தை விரைகளின் மூலமாகவே பிரயோகித்தார். மூனறாவது வகுப்பில் யூஸால் (eusol) என்னும் தோஷஹரமான சரக்கோடு நீலாஞ்ஜனச சத்தையும் கலந்து உபயோகித்தார். நான்காவது வகுப்பில கொய்னா, நார்காடின் முதலிய வேறு சில சரக்குகளைப் பிரயோகித்தார். ஆனால் இறுதியிற்கூறிய இரண்டுவிதமான சிகித்ஸைகளால பிரயோஜனம் ஒன்றுமில்லை. இரண்டாவது வகுப்பு சிகித்ஸை சுலபமாகக் காணப்பட்டது; அதைவிட முதல் வகுப்பு சிகித்ஸையினால் முற்றிலும் திருப்திகரமான குணங்கள் உண்டாயின. உலோஹரூபமான பாதரஸம் கலந்த நீலாஞ்ஜன உப்புகளைப் பிரயோகிப்பதில்: (1) உபயோகிக்கப்படும் ஔஷதம் மிகவும் சொற்பம்; (2) குணம் வெகு சீக்கிரத்தில் தெரியும்; (3) விஷ ஸம்பந்தமான குணங்கள் ரொம்பவும குறைந்துவிடும். இந்த சிகித்ஸை மிகவும் பயன் படக்கூடியதாயிருப்பதால, கலா - ஆஸார் அதிகமாய வியாபித்துள்ள இடங்களில் வைத்தியர்கள் இவ்வாறு செய்து பார்ப்பது அவசியமாகும்.

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினு 64. ஆமவாதம் என்னும் கீல்வாயு.

"பெருமை பொருந்திய பத்திராதிபர் அவர்களுக்கு,
ஐயா,

எனது ஸஹோதரன் ஒருவன் நாலுமாத காலமாய் ஆமவாத ஸம்பந்தமான ஸந்தி வீக்கத்தோடு மிகவும் சிரமப்படுகிறான். அவன் பாயும் படுக்கையுமாயிருக்கிறான். அவனுக்கு வலது முழங்காலில் முதலில் வலியும் வீக்கமும் ஸம்பவித்தது ; பிறகு வலி மாத்திரம் ரொம்பவும் குறைந்தது ; ஆனால் காலை அசைக்கக்கூடிய சக்தியை இழந்துவிட்டான் ; ஆகவே இப்பொழுது அவனுக்கு நடக்கமுடியாது. அவன் வெளியூர்களில் இருந்த வரையில (15-நாட்களுக்கு முன் வரையில்) ஆங்கிலேய வைத்தியரிடம் பொடாஷ் ஐயோடைட், ஆஸ்பிரைன் முதலிய இங்கிலீஷ் மருந்துகளை உபயோகித்து வந்தான் ; இந்திய வைத்தியர்களிடமும், அநேகவிதமான ஔஷதங்களையும் வாங்கி உபயோகித்தான். ஒன்றும் பயன்படவில்லை. அவன் ஒரு மாதத்திற்கு முன்பு கல்கத்தாவுக்குப் போக நேரிட்டது ; அங்கே சில முக்கியமான ஆயுர்வேத-ஆங்கில வைத்தியர்களிடம் ஏதோ ஔஷதங்களைப் பெற்று உபயோகித்தும் குணமில்லை. கீல்வாயு இவனுக்குக் கொஞ்சம் நாள்பட்டது. தாங்கள் தயவு செய்து ஏதாவது பரிஹார முறையை அறிவிப்பீர்களானால் ரொம்பவும் நன்றி பாராட்டுவேன்."

K. C. மாணிக்கம்.

விடை :—தாங்கள் விவரித்திருப்பதைக் கவனித்தால் பிணியாளிக்கு ஒருவிதமான சிகித்ஸையையாவது ஏற்றவளவு தொடர்ந்து நிறைவேற்றவில்லையென்று தெரியவருகிறது. மேலும் வியாபகர்களான வைத்தியர்களிடம் சிகித்ஸை செய்துகொண்டும் ஒரு குணமும் உண்டாகவில்லை யென்றால், அதற்கு ஒரே வைத்தியரிடம் நிலைத்து சிகித்ஸை செய்துகொள்ளாமல, அடிக்கடி வைத்தியர்களை மாற்றியதும, ஊரூராகத் திரிந்ததுமே காரணம் என்றும் கூறலாம். தாங்கள் இதன் அடியில நாம குறிப்பிடும் சிகித்ஸையை விடாமல ஒருமாதம அல்லது நாற்பது நாட்கள் வரையில் தொடர்ந்து செய்யவும் :—பிரதி தினமும் காலையில் மலம் கழியுமபடி இரவில் படுக்கைக்குப் போகையில் அரைப பலம ஆமணக்கெண்ணெயைப பாலோடு கலந்து உட்கொள்ளச செய்யவும். சித்ரகாதி சூர்ணம் என்கிற ஔஷதத்தை வேளைக்கு 10-குன்றுமணி யெடை வீதம த்ரிபலாக்வாதத்தின் அனுபானத்தோடு தினத்திற்கு மூன்று வேளை உட்கொள்ளச் செய்யவும். நாராயண தைலத்தை தெவ்வாறு நாளும் காலையிலும் மாலையிலும வீக்கமும வலியுமுள்ள இடங்களில வலிவுடன தேய்த்து, கொச்சியிலையிட்டுக காய்ச்சிய வெந்நீரால ஒற்றடம கொடுக்கவும். நெய்யும் பாலும் அதிகமாகக் கலந்த உணவுகளைப் புஜிக்கச செய்யவும். ஈரத்தில் நடமாடக்கூடாது. குளிர்ந்த ஜலத்தை ஸ்நானத்திற்காவது குடிக்கவாவது உபயோகிக்கலாகாது. இவ்வித முறையை அநுஸரித்து சிகித்ஸை செய்ததில் அநேகம் பிணியாளிகள் ஸ்வஸ்த்தமாயிருப்பதாய் நாம் அறிவோம்.*—ப-ர்.

---

### வினு 65. நிதாந பஞ்சகம்.

"ஐயா,

நான் தமிழ் வைத்திய நூல்களைப் படித்து வைத்தியம் செய்துவந்த பரம்பரையில் இருந்து வருவதால், எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாது. இப்பொழுது ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய நூல்களைக் கற்க ஆவலிருந்தும் நான் இருக்குமிடத்தில் அதற்கேற்ற ஸௌகரியங்கள் ஒன்றுமில்லை. வைத்தியத்தில் "நிதாந பஞ்சகம்" நன்றாகத் தெரியுமா வென்று ஒரு ஸம்ஸ்கிருத வித்வான் என்னைக் கேட்டார். ஸாவகாசமாய் பதில் சொல்லுவதாக அவரிடம் சொல்லிவிட்டு உடனே தங்களுக்கு இக்கடிதத்தை எழுதினேன். அவரிடம் தெரியாதென்று உண்மையைச் சொலவதைவிட, தங்களைப்போன்ற தத்துவமறிந்தவரிடம் சொல்லி விஷயம் அறிவது மேல் என்று எனது கருத்து. தயவுசெய்து அதற்கு விவரம கூறவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்."

ச. கே. மு. வைத்தியர்.

விடை :—ரோக விசேஷங்களைப பரீக்ஷித்து அறிவதற்கான ஸாதநங்கள் நிதாநங்கள் எனப்படும். ஆயுர்வேதத்தில் அந்த நிதாநங்கள் ஐந்து விதங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை காரணம், பூர்வ ரூபம், ரூபம், ஸம்ப்ராப்தி, உபசயம் என்பனவாம். அவற்றுள் (1) காரணம் என்பது-வியாதியை பிரத்தியக்ஷமாகவோ பரோக்ஷமாகவோ உண்டுபண்ணும் ஹேது. (2) பூர்வ ரூபம்-என்பது வியாதி பூர்த்தியாய் உண்டாவதற்கு முன காணப்படும் குறிகள். ரூபம் என்றால் ரோகத்தின் இயற்கைக் குறிகள். (4) ஸம்ப்ராப்தி என்றால்-காரணங்கள் தேஹத்தில் பற்றும வகையையும, வியாதி தேஹத்தில் பரவும விதத்தையும மற்ற உற்பத்திக்கிரமங்களையும அறிவிக்கும விசேஷமாம. (5) உபசயம என்பது-சிகித்ஸை செய்து வியாதி ஸ்வரூபத்தின் தத்துவத்தை நிச்சயிப்பதற்கான ஸாதந விசேஷம். இவ்வைந்துள் முதலிற்கூறிய காரணத்திற்குப் பிரத்தியேகமாக நிதாநம என்று பெயர் வழங்கப்படும். இந்த ஐந்துக்கும் ஆயுர்வேதத்தில் "பஞ்ச நிதாநங்கள்" அல்லது "நிதாந பஞ்சகம்" என்று பெயர்.—ப-ர்.

---

* இங்கு குறிக்கப்பட்டுள்ள சித்ரகாதி சூர்ணம், த்ரிபலாக்வாதம, நாராயண தைலம இவற்றின் முறைகளைப்பற்றிய விவரங்களை, வைத்தியகலாநிதி ஆபீஸில வெளியாயுள்ள சார்ங்கதர ஸம்ஹிதையில் காணலாம்.

# NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### க்ளிஸரைன் என்னும் சரக்குக் கிடைப்பது அரிது.

யுத்ததளவாட மந்த்ரியினுள் அடியில் வருமாறு ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது :—யுத்தத்தில் நடந்தேறவேண்டிய வேலைகளுக்கு அதிக அளவாக க்ளிஸரைன் ஸப்ளை செய்யவேண்டியிருப்பதால், ப்ரிடிஷ் பாரமகோபியாவின்படி ஔஷதாதிகளைத் தயார் செய்வதற்கு இனி அச்சரக்கை எவருக்கும் கொடுக்கக்கூடாது. ஆகையினால் இனி வைத்தியர்கள் எந்த ஔஷதத்திலும் க்ளிஸரைனை உபயோகப்படுத்தும்படி எழுதுவதற்கு ஸாத்தியப்படாது. அவரவர்கள் இப்பொழுது தமதிடம் வைத்துக்கொண்டிருக்கிற க்ளிஸரைனை ஸாத்தியமானவரையில் செட்டாக வைத்துக்கொள்வது நலம் :—Prescriber.

---

### ஒருவனுக்கு மிதமிஞ்சிய உடற் சூடு.

ஆரோக்கிய நிலைமையில் 97-முதல் 99-டிக்கிரி வரையிலும் உடற்சூடு உண்டென்றும், ஜ்வரத்தில் அதற்குமேல் சுமார் 106-டிக்கிரி வரையிலும் உயரும் என்றும் அனைவரும் அறிந்த விஷயம். ஒரு இடாலியனுடைய தேஹத்தைப் பரிசோதித்ததில், அவனுக்கு ச்வாஸாசய வியாதியின் காரணமாக உடற்சூடு 138-டிக்கிரி வரையில் உயர்ந்து நின்றது எ ப் பதிவு செய்துகொள்ளப்பட்டது :—Practical Medicine.

---

### ஓர் அறை ஈறமாயிருப்பதை அறியும் உபாயம்.

நாம் வாஸம்செய்கிற அறை ஈரமாயிருந்தால், அதனால் தேஹம் ஆரோக்கியக்குறைவை அடையும் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் ஒரு அறை ஈரமாயிருப்பதையும் ஈரமில்லாதிருப்பதையும் கண்களால் பார்த்தே தெரிந்துகொள்வது கஷ்டம்; பார்ப்பதற்கு உலர்ந்திருப்பதாகத் தோற்றும் அறையில் தரையும் விசேஷமாக ஆகாயமும் ஈரமாயிருக்கக்கூடும். இதை நிச்சயிப்பதற்காக அடியில் வரும் பரிசோதனையைச் செய்து பார்க்கலாம் :— இரண்டு பவுண்டு அளவுள்ள சுண்ணும்பை அறையினுள் ஒருபக்கத்தில் வைத்துவிட்டு, சற்றும் காற்றுப் புகா வண்ணம் கதவையும் சாளரங்களையும் நன்ருக மூடிவிடடு அப்பால் 24-மணி ஸாவகாசம் கழித்து அந்தச் சுண்ணத்தை எடை போட்டுப் பார்க்கவும்; அப்பொழுது அது நிறையில் 10-கிராமுக்கு அதிகமான கனம் அதில் சேர்ந்திருந்தால், அந்த அறை ஈரமாயிருப்பதாகவும், அவ்வளவு ஈரம் ஆரோக்கியத்திற்குத் தகாததாகவும் நிச்சயிக்கப்படவேண்டும். இது ஈரத்தின் அளவைக் குறிப்பிட்டு அறிவிப்பதற்கு எவ்விதத்திலும் ஏற்ற ஸாதனமாயிருக்கின்றது.

---

### அபரா யென்னும் மாயையை எளிதில் வெளிப்படுத்தல்.

ஸ்த்ரீகள் பிரஸவிக்கும்போது, கருப்பையிலிருந்து சிசுவுக்குப் பின்னால் மாயை எனப்படும் ஒரு பிண்டம் வெளிப்படுகிறதல்லவா! சில ஸமயம் அது தனக்குத் தானே கருப்பையை விட்டுப்பிரிந்து வெளியில் வராமல் ஆசயத்திற்குள்ளேயே தங்கியிருக்கும். அப்பொழுது, பிரஸவ வேலையில் நிபுணராயிருப்பவர், கருப்பைக்குள் கையைச் செலுத்தியாவது சஸ்திரப் பிரயோகம் செய்தாவது அதை வெளிப்படுத்துவது வழக்கம். கொதிக்கவைத்த ஜலத்தில் சுத்தமான உப்பைக் கரைத்து, அந்த நீரை ஒரு பீச்சாங்குழலில் எடுத்து, அபராவிலிருந்து வெளியில் தொங்கும் நாபிக்கொடியின் மூலமாய் அபராவுக்குள் போகும்படி அந்த நீரைப் பீச்சிடவேண்டும். நாபிக்கொடியிலுள்ள ஸிரையின் (காரிரத்தக் குழாயின்) மூலமாய் இவ்வுப்பு நீர் அபராவிற் பிரவேசிக்கும். அபராவானது கிரமமாக இவ்வுப்புநீரால் பருத்து ஊதிவிடும். இறுதியில் அபராவைச்சுற்றிலும் (அதை ஆசயத்துடன் கட்டியிருக்கும்) அமைந்துள்ள சில தாதுக்கள் பற்றற்றுப் போக, அபராவும் கர்ப்பாசயத்தைவிட்டு விலகிவிடும். அபராவுக்குப் பின்னால் திரவபதார்த்தம் சேரச் சேர, அத்திராவகதினால் அபரா மெள்ள மெள்ள வெளியில் தள்ளப்படும்; இச்சந்தர்ப்பத்தில் உப்புநீரால் கர்ப்பாசயம் தூண்டப்படவே, அவ்வாசயமும் சுருங்கி அபராவை வெளிப்படுத்தும். இவ்விஷயம் க்ரிடிக் அண்ட் கைட் (Critic and Guide) என்னும் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. இச்சிகித்ஸா முறை எளிதாகத் தோற்றுவதால், நமது கலாநிதியைப் படிக்கும் வைத்திய நண்பர்களும் இதைக் கையாண்டு, தமது அநுப

வத்தை மீண்டும் இப்பத்திரிகையின் வாயிலாக வெளியிடுவது உபயோககரமாயிருக்கும். [அபரா என்பதை தமிழில் மாயை என்றும் ஆங்கிலத்தில் ப்ளஸெண்டா (Plecenta) என்றும் வழங்குவர்.]

---

### விரணங்களுக்கு ஒரு ஸுலபமான ஔஷதம்.

பால்ஸம் ஆப் பெரு (Balsam of Peru) என்பது, சாம்பிராணி வாஸனையுள்ள குங்கிலியத் தைலம் போன்ற ஒருவித ஔஷதம். ஆமணக்கெண்ணெயில் நூற்றுக்குப் பத்துப் பங்கு வீதம் பால்ஸம் ஆப் பெருவைக் கலந்து, அநேகவிதமான புண்களிலும் வெட்டுக் காயங்களிலும் தடவி பந்தநம் செய்வது சிலாக்கியமான முறை. சிறிது சதை வளர்ந்துவரும் விரணங்களை பால்ஸம் ஆப் பெரு என்பது நன்ருக ஆற்றி விரைவில் குணமுண்டுபண்ணுந்தன்மையது. ஆமணக்கெண்ணெயும், பால்ஸம் ஆப் பெருவும் கலப்பதால் விரணமானது ஆழமான பாகத்திலிருந்தே சிதைவுண்ட பாகங்கள் மறைந்து மிகவும் திருப்திகரமாக ஆறிவிடும்.—American Medecine.

---

### கக்கிருமலுக்கு அநுபவ ஸித்தமான ஒரு சிகித்ஸை.

சென்ற வருஷம் ஜூலை மாஸம் முதல் தேதி வெளியான பிரிடிஷ் மெடிகல் ஜர்னலில், டாக்டர் T. மார்க்ஹோவெல் என்பவர் கக்கிருமலுக்கு வெள்ளைப்பூண்டு வீடுகளில் ஸாதாரணமாய் உபயோகிக்கக் கூடிய மிகப் பிரயோஜனகரமான ஔஷதச் சரக்கு என்று ஒரு குறிப்பு வெளியிட்டிருக்கிருர். வெள்ளைப்பூண்டின் மேல்புறணிகளை உரித்து, சின்னஞ்சிறிய துண்டுகளாகச்செய்து, பாதங்களில் காலுறையை அணிந்துகொண்டு, அதன்மேல் இப்பூண்டுத் துண்டுகளைப் (பாதங்களின் மேலும் கீழுமாக) பரப்பி, அதற்குமேல் மற்றொரு காலுறையைப் போடவும். (பாதங்களில் சர்மத்தின்மீதே உபயோகித்தால், நடக்கும்போதும் மற்ற ஸமயங்களிலும் எரித்தலுண்டாகும்.) இப்பூண்டின் துண்டுகளைப் பாதங்களில் கட்டிக்கொண்ட அரைமணிக்குள்ளாகவே அவற்றிலிருந்து ஒருவித வாஸனை நாசியினுல் உறிஞ்சப்படும்; அப்படி உறிஞ்சப்படுவதால், 48-மணி ஸாவகாசத்தில் இழுப்பும் ச்வாஸ வேகமும் தணிந்துவிடும். வியாதியின் நிலைமைக்குத் தகுந்தவாறு வெள்ளைப்பூண்டை ஒருவாரம் அல்லது அதற்கும் மேலாகவே பாதங்களில் முற்கூறிய விதம் பிரயோகித்து வரலாம். வெள்ளைப் பூண்டை ரொட்டியோடு கலந்தும், பாலில் சேர்த்துக் காய்ச்சியும் உட்கொள்ளவும் செய்யலாம்.

---

### இருமலில் உஷ்ண ஜலத்தின் உபயோகம்.

அடிக்கடியும் காஸத்தினுல் வருந்துபவருக்கு திடீரென்று உண்டாகும் இருமலைத் தடுப்பதற்கு உஷ்ண ஜலம் சிறந்த ஔஷதம் என்று அறியப்படுகிறது; முக்கியமாக க்ஷயகாஸத்தில் தற்காலம சாந்தி யுண்டுபண்ணுவதற்கு இதை உபயோகிப்பது நலம். திடீரென்று வேகத்துடன் கிளம்பும் இருமல், உஷ்ண ஜலத்தை இரண்டு மூன்று விழுங்குகள் உட்கொண்டவுடனே ஆச்சரியப்படும்படி தணிவடையும். இருமலுக்கு முக்கியமாக உபயோகிக்கப்படும் வேறு ஔஷதங்கள் ஜீர்ணசக்தியையும் பசியையும் கெடுத்து விடுவது வழக்கம். ஆனல் உஷ்ணஜலமோ தேஹத்தில் இயற்கையில் நடந்தேறும் ஜீர்ணவேலை முதலிய எச்செயல்களுக்கும் சிறிதும் விரோதம் செய்யாமல் இருமலைத் தணிக்கச்செய்யுமியல்புடையது. இருமலின் வேகம் தோன்றும்போதெல்லாம் நன்கு கொதிக்கவைத்த ஜலத்தை உட்கொள்ள வேண்டும்.—American Medicine.

---

### குழந்தைகளுடைய அதிஸாரத்திற்கு.


சில குழந்தைகளுக்கு ஸாதாரண அதிஸாரமும் ஒவ்வொரு ஸமயத்தில் அபாயகரமான நிலைமையை உண்டு பண்ணும். ஆகவே அதிஸாரம் ஏற்பட்டவுடனே, வேறு சிகித்ஸைகளுக்காகப் பிரயத்தனப்படுவதற்கு முன்பாக, ஸோடா எனப்படும் உஷாக்ஷார ஸத்துவத்தை ஒரு தேக்கரண்டியளவு வீதம் கொதித்த ஜலத்தில் கரைத்து தினத்திற்கு மூன்று வேளை உபயோகிக்கவும். இது வயிற்றில் சேர்ந்துள்ள புளிப்பைத் தணியச்செய்து அதிஸாரத்தையும் தடுக்கும்.—The Doctor

---

இந்திய வைத்திய சாஸ்திராபிவ்ருத்தியில் அபிமானம் பாராட்டும் டாக்டர் ஜே. வி. இராமஸ்வாமி நாயுடு அவர்கள் "வைத்திய கலாநிதியில்" சிலப் பிரகரணங்களில் அச்சிடுவதற்கு அநேகம் சித்திரப் படங்கள் ஸம்பந்தமான ப்ளாக்குகளை உதவியதற்கு நாம் மிகவும் நன்றிபாராட்டுகிறோம். அல்லாமலும் இக்கனவான் அப்போதைக்கப்போது உபயோககரமான வியாஸங்களை வைத்தியகலாநிதிக்காக எழுதி வருவதையும் மனதாறப் பாராட்டுகிறோம்.

## கழுத்திலும், மார்பிலும், வயிற்றிலும் அடங்கியுள்ள முக்கியமான அவயவங்களை விளக்கும் படம்.

1. தொனியந்திரம் (அல்லது ஸ்வரயந்திரம்)
2. ச்வாஸநாளம்
3. அக்ஷகாஸ்த்தி (அல்லது காறையெலும்பு)
4. புப்புஸம் (வலதுபக்கம்) (அல்லது ச்வாஸாசயம்)
5. யக்ருத் (அல்லது கல்லீரல்)
6. பித்தாசயம் (அல்லது பித்தப்பை)
7. வ்ருக்கம் (வலதுபக்கம்)
8. மூத்திரஸ்ரோதஸ் (வலது பக்கம்)
9. ஸ்த்தூலாந்திரம் (பெருங்குடல்)
10. ஊர்த்வமுகஸ்த்தூலாந்திரம்
11. வர்மி (அல்லது வம்பிகா)





12. கண்ட தமநீ (அல்லது கழுத்தின் செவ்விரத்தக்குழாய்)
13. கண்ட ஸிரை (அல்லது கழுத்தின் காரிரத்தக் குழாய்)
14. புப்புஸம் (இடது பக்கம்) (அல்லது ச்வாஸாசயம்)
15. இருதயம் (அல்லது இரத்தாசயம்)
16. ஆமாசயம் (அல்லது இரைப்பை)
17. வ்ருக்கம் (இடது பக்கம்)
18. மூத்திர ஸ்ரோதஸ் (இடது பக்கம்)
19. ஸூக்ஷ்மாந்திரம் (அல்லது சிறுகுடல்)
20. வஸ்தி (அல்லது மூத்திராசயம்)

வயிற்றினுள் அடங்கிய அவயவங்களைக் காட்டுவதற்காக, அவற்றிற்கு ஆவரணமாயுள்ள வயிற்றின் சர்மம் கிழிக்கப்பட்டு, தொடைகளின் பக்கமாய் மடித்துத் தள்ளப்பட்டிருப்பதுபோல் விளக்கியிருக்கிறது.

கழுத்துக்குக் கீழிருந்து பெருங்குடல் வரையில் இரு புறங்களிலும் பொட்டுப்பொட்டாகக் காணும் வெள்ளைக்குறிகள், பர்சுகாஸ்த்திகளின் (விலா எலும்புகளின்) அறுபட்ட முனைகள்; மார்புமுதலான அறைகளுக்குள் அடங்கிய அவயவங்களைக் காண்பதற்காக, அவற்றிற்கு ஆவரணமாயிருந்த அஸ்த்திகள் அறுக்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

தேஹத்தில் இரத்தக்குழாய்கள் வியாபித்துள்ள வகையை விளக்கும் படம்.



இப்படத்தில் சிவப்பாயிருப்பவை தமனிகள் என்கிற செவ்விரத்தக் குழாய்களையும், கருநிறமானவை விரைகள் என்னும் காரிரத்தக் குழாய்களையும் காட்டுகின்றன.

௬ ௨ ௪

இச்சித்திரத்தில் ஸௌகரியத்தின்பொருட்டு ஒரு பாரிசத்தில் தமனிகளும், மற்றொரு பாரிசத்தில் விரைகளும் வியாபித்திருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது; ஆனால் தமனிகளும், விரைகளும் உடலில் எல்லாப் புறங்களிலும் ஒரே அளவாய் வியாபித்திருக்கின்றன.

## நான்காம் அத்தியாயம்.

இனி மர்ம-விபாக சாரீரம்[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படும் :—

மர்மங்க்ள் நூற்றேழு.

மனித தேஹத்தில் நூற்றேழு மர்மங்கள் உண்டு. அவற்றுள் ஒவ்வொரு காலிலும் ஒவ்வொரு கையிலும் தனித்தனியே பதினொரு மர்மங்கள் இருக்கின்றன; கோஷ்டத்தில் மூன்றும், மார்பில் ஒன்பதும், முதுகில் பதினான்கும், தோளுக்கு மேலுள்ள அவயவங்களில் முப்பத்தேழும் உண்டு. 1, 1½.

கால்களின் மர்மங்களும், அவற்றின் அபிகாதத்தால் நேரிடும் அபாயங்களும்.

பாதத்தின் உட்புறத்து மத்தியபாகத்தில் நடுவிரல் வரையில் அப்பாகங்களைச் சுற்றிலுமுள்ள மர்மம் தலஹ்ருதயம்[2] என்று வழங்கப்படும்; அந்த மர்மத்தில் அபிகாதமுண்டானால், வலி தாங்கக்கூடாமல் மரணம் ஸம்பவிக்கும். பெருவிரலுக்கும் ஆள்காட்டிவிரலுக்கும் இடையில் க்ஷிப்ரம்[3] என்கிற மர்மம் இருக்கிறது; இதில் அபிகாதமுண்டானால் ஆக்ஷேபகம் என்னும் இசிவு உண்டாய் அம்மனிதன் இறந்து விடுவான். க்ஷிப்ரமர்மத்திற்கு இரண்டு அங்குலம் மேலே கூர்ச்சம்[4] என்கிற மர்மம் உண்டு; அவ்விடம் அடியுண்டால் பாதம் சுழன்று நடுங்கும். கணுக்காலின் பூட்டிற்குக் கீழே அடுத்தாற்போல் [1]கூர்ச்சசிரஸ் என்னும் ஸந்தியிருக்கின்றது; அவ்விடத்தில் அபிகாதமுண்டானால் வீக்கமும் வலியும் அதிகமாயுண்டாகும். ஜங்கையென்னும் முழங்காலுக்குக் கீழுள்ள காலும் பாதமும் சேருமிடத்தில் குல்பம்[2] என்னும் மர்மம் இருக்கின்றது; அவ்விடம் தாக்கப்படுமானால் வலியுண்டாய் பாதம் அசைவற்றுப்போய் காலின் வேலையும் மந்தப்பட்டுவிடும். முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையில் இந்திரவஸ்தி என்னும் மர்மம் உண்டு; அவ்விடம் அடியுண்டால், இரத்தப் பெருக்கு அபரிமிதமாய் எடுத்து மரணமுண்டாகும். காலும் தொடையும் கூடுமிடத்திலுள்ளது ஜாநு[3] என்னும் மர்மம்; அவ்விடம் அபிகாதப்பட்டால் உயிருக்கு அபாயமின்றியே முடவனாக ஆய்விடுவான். முழங்காலுக்கு மூன்று அங்குலம் மேலே ஆணீ என்னும் மர்மம் உண்டு; அது அடியுண்டால் தொடை அசைக்க முடியாமற் போவதுடன் வீக்கமும் உண்டாகும். தொடையின் மத்தியிலுள்ள மர்மம் உர்வீ யெனப்படும். இதில் அபிகாதமுண்டானால், இரத்தம் அபரிமிதமாய் வெளியாகுமாதலால், தொடை மிகவும் சுஷ்கித்து அபாயம் நேரிடும். தொடையின் அடிப்புறத்திலிருக்கும் மர்மம் லோஹிதம் எனப்படும்; அது தாக்கப்படுமானால் இரத்தப்பெருக்கு விசேஷமாயுண்டாய், பக்ஷவதம் என்னும் பாச்வவாயு அவ்வவயவத்திற்கு ஸம்பவிக்கும். வங்க்ஷணம் என்னும் தொடையிடுக்குக்கும் பீஜகோசத்திற்கும் இடையில் விடபம் என்கிற ஸந்தியிருக்கின்றது; அதில் அபிகாதமுண்டானால் அம்மனி

1. அபிகாதத்தினால் அபாயம் விளைவிக்கக்கூடிய அவயவம் மர்மம் எனப்படும். ஸிரைகள், தமனிகள், நாடிகள் முதலியவற்றின் முக்கியமான பாகங்கள் ஒன்றுகூடும் ஸ்தலம் மர்மஸ்தானமாகும் என்று ஸுச்ருதம் முதலியதிலும், இவ்வத்தியாயத்திலேயே இதன் பிறகும் கூறப்படுகிறது. அவ்வித மர்மங்கள் தேஹத்தில் எவ்வெவ்விடங்களில் பரவியிருக்கின்றனவென்பதை விளக்கும் அத்தியாயம் மர்மவிபாகசாரீரம் ஆகும்.

2. தலஹ்ருதயம்—உள்ளங்காலின் மத்தியபாகக் குழி.

3. அதிசீக்கிரத்தில் பிராணபாய முண்டுபண்ணுவதால் க்ஷிப்ரம் எனப்படுகிறது.

4. கூர்ச்சம்—குச்சுபோன்ற அவயவம் எனப்பொருள்.

1. கூர்ச்சசிரஸ் கூர்ச்சத்தின் தலைப்பிரதேசம்.

2. குல்பம்—கணுக்காலின் பெயர்.

3. ஜாநு—முழங்கால்.

தன் நபும்ஸகனைய் விடுவான். கால்களில் உள்ள மர்மங்கள் இவையேயாம். 2—7½.

**கைகளிலுள்ள மர்மங்களும் அவற்றின் அபிகாதத்தினல் உண்டாகும் அபாயங்களும்.**

கால்களில் இருப்பதுபோலவே கைகளிலும் மர்மங்கள் அமைந்திருக்கின்றன. ஆனல் பேதமென்னவென்றால்—கணுக்கால் குல்பம் எனப்படுவதுபோல அதற்குப் பதிலாக மணிக்கட்டு மணிபந்தம் எனப்படும்; முழங்கால் ஜாநுவென்று சொல்லப்படுவதுபோல முழங்கை கூர்ப்பரம் எனப்படும். இவ்விரண்டு மர்மங்களிலும் அபிகாதமுண்டானல் கைகள் மொண்டியாய்விடும். தொடையிடுக்கில் விடப மர்மம்போல அக்குளில் கக்ஷாதரம் என்னும் மர்மம் அமைந்திருக்கிறது; அவ்விடம் தாக்கப்பட்டாலும் கை மொண்டியாய்விடும்.[1] 8,9.

**உடலிலடங்கிய மர்மங்களும் அவற்றின் அபிகாதத்தால் ஸம்பவிக்கும் அபாயங்களும்.**

ஸ்த்தூலாந்த்ரம் என்னும் பெருங்குடலில், அபாந வாயு, மலம் இவற்றை வெளிப்படுத்துவதற்காக இணைக்கப்பட்டிருக்கும் மர்மம் குதம் எனப்படும்; அதில் அபிகாதமுண்டானல் உடனே உயிருக்கு அபாயம் நேரிடும். வில்லைப்போல வளைந்துள்ள மூத்திரம் தங்கியிருப்பதற்கு அவசியமானதும், இரத்தம் மாம்ஸம் இவற்றைச் சொற்பமாயுடையதும், அடிப்புறத்தில் ஒரு முகம் அல்லது த்வாரத்தையுடையதுமான வஸ்தி என்னும் மர்மம் அமைந்திருக்கிறது; அது அபிகாதமுண்டால் உடனே பிராணபாயமுண்டாகும்; ஆனல் அச்மரீயென்னும் மூத்திரக்கற்களால் சிதைவுண்டால் அவ்வாறு அபாயம் ஸம்பவிக்காது; அதிலும் இருபுறங்களிலும் வஸ்தி சிதைவுறுமானல் பிராணபாயம் ஸம்பவிக்கும்; ஒரு புறத்தில் அபிகாதமுண்டானல் மூத்திரம் ஸ்ரவித்துக்கொண்டு பெருமுயற்சியின்பேல் விரணம் மெதுவாக ஆறும். தேஹத்திற்கு மத்தியபாகத்தில், அதிலும் ஆமாசய-பக்வாசயங்களுக்கு இடையில், விரைகளுக்கெல்லாம் ஆதாரமாய் நாபீ யென்னும் மர்மம்[1] அமைந்திருக்கின்றது; இதுவும் அபிகாதத்தினல் உடனே பிராணபாயம் விளைவிக்கக்கூடியது. ஆமாசயத்தின் த்வாரத்திற்கு அருகில் இருப்பதும்,[2] மார்பறையினுள் இரண்டு ஸ்தநங்களுக்கும் இடையில் அமைந்துள்ளதும், ஸத்துவாதிகளுக்கு உறைவிடமாயுள்ளதும் இருதயம் என்னும் மர்மம்; இந்த மர்மமும் அபிகாதத்தினல் உடனே உயிருக்கு அபாயம் விளைவிக்குந் தன்மையது. ஸ்தநங்களுக்கு இரண்டு அங்குலம் மேலே ஸ்தந ரோஹிதங்கள் என்னும் மர்மங்களும், ஸ்தநங்களுக்கு இரண்டு அங்குலம் கீழே ஸ்தநமூலங்கள் என்னும் மர்மங்களும் உண்டு; ஸ்தநரோஹிதங்களில் அபிகாதமுண்டானல் மார்பறையினுள் இரத்தம் நிரம்பி மரணமுண்டாகும்; ஸ்தநமூலாபிகாதத்தினல் மார்பறையில் கபம் அதிகரித்து பிராணபாயம் உண்டாகும். மார்பினுள் இரு புறங்களிலும், வாயு உட்சென்று வருவதற்குபயோகமான இரண்டு குழாய்கள் அபஸ்தம்பங்கள் என்று கூறப்படும்; இதில் அபிகாதமுண்டானல் மார்பறையில் இரத்தம் நிரம்பி, ச்வாஸமும் காஸமும் அதிகரித்து மரணம் ஸம்பவிக்கும். முள்ளந்தண்டுக்கும் மார்புக்கும் இடையில் அவற்றிற்கு இரு புறங்களிலும், தோள்களுக்குக் கீழே அபலாபங்கள் என்கிற மர்மங்கள் உண்டு; அவற்றில் அபிகாதமுண்டானல்

---

1. கையிலுள்ள மர்மங்கள்:— தலஹ்ருதயம், கூர்ச்சம், கூர்ச்சசிரஸ், மணிபந்தம், இந்த்ரவஸ்தி, கூர்ப்பரம், ஆணி, உர்வீ, லோஹிதாக்ஷம், விடபம் என்பனவாம்.

1. சிசு கர்ப்பத்திலிருக்கையில் நாபியில் நாபிக்கொடியின் மூலமாகவே இரத்தக்குழாய்கள் சிசுவின்தேஹமெங்கும் பரவுவது இயல்பாகையால், அதை ஆதாரமாகக்கொண்டு விரைகளுக்கெல்லாம் நாபி ஆதாரமானது என்று கூறப்படுவதாய் அறிக.

2. ஆமாசயத்தின்மேல்த்வாரம் இருதயத்தின் முனைக்கு அருகிலிருப்பதால் இங்ஙனம் கூறப்பட்டது என்று அறிக.

மார்பறையில் இரத்தம் நிரம்பி, சீழ் பிடித்து மரணமுண்டாகும். முள்ளந்தண்டுக்கு இரண்டு பக்கங்களிலும் கூபகச் செவிகள் என்னும் இடுப்பின்பக்கப்பிதுக்கங்கள் இரண்டு அமைந்திருக்கின்றனவல்லவா? அதாவது பிருஷ்டங்களுக்கு மேலே அடுத்தாற்போல் முள்ளந்தண்டுக்கு இரு புறங்களிலும் அதைப் பற்றிக்கொண்டிருக்கும் பாகங்களில் கடீகதருணங்கள் என்கிற இரண்டு மர்மங்கள் இருக்கின்றன; இவ்விடங்களில் அபிகாதமுண்டானால் அபரிமிதமாய் இரத்தப்பெருக்கு எடுத்து, பாண்டு ரோகமுண்டாய், இயற்கையுருவம் அழிந்து உயிர்துறப்பான். இடுப்பின் பக்கங்களில் முள்ளந்தண்டுக்கு இருபுறங்களிலுமுள்ள பூட்டுகளில் பிருஷ்டங்களுக்கு வெளியில் குகுந்தரங்கள் என்னும் மர்மங்கள் அமைந்திருக்கின்றன; இவை தாக்கப்படுமானால் கீழே கால்கள் அசைக்கமுடியாமற் போவதுடன் பரிசவுணர்ச்சியும் போய்விடும். கூபகச்செவிகளுக்குமேல் இருபுறங்களிலும் உட்பக்கமாய் முருந்துகளை ஆச்ரயித்தவைகளாய் அவ்விடத்திலுள்ள ஆசயங்களையும் மறைத்துக்கொண்டு இருக்கும் மர்மங்கள் நிதம்பங்கள் எனப்படும்; இவற்றில் அபிகாதமுண்டானால், இவ்விடத்திற்குக் கீழுள்ள அவயவங்களில் வீக்கமுண்டாய், தேஹவலிமை குன்றிப்போய் மரணம் ஸம்பவிக்கும். பிருஷ்டபாகங்களுக்கும் உடலின் பக்கங்களுக்கும் இடையில் பாரிசங்களுக்கு உட்புறமாய் குறுக்காகவும் மேல்நோக்கியவாறு அமைந்துள்ளவை பார்ச்வ ஸந்திகள் என்னும் மர்மங்களாம்; அவை தாக்கப்படுமானால் அவ்விடத்திலுள்ள கூபகக்குழியில் இரத்தம் நிரம்பி மரணமுண்டாகும். முற்கூறிய ஸ்தநமூலங்கள் என்னும் மர்மங்களுக்கு நேர் இரேகையில் முள்ளந்தண்டுக்கு இரு புறங்களிலும் அதைச் சார்ந்தாற்போல இரண்டு மஹாஸிரைகள் உண்டு; அவற்றிற்கு ப்ருஹதீ எனப்பெயர்; இந்த மர்மஸ்த்தானங்கள் தாக்கப்பட்டால், அபரிமிதமாய் இரத்தப்பெருக்கு உண்டாய் இறந்துவிடுவான். முள்ளந்தண்டுக்கு இரண்டு பக்கங்களிலும், புஜமூலங்களில் அமைந்துள்ள அம்ஸபலகங்கள் என்னும் மர்மங்களில் அபிகாத முண்டானால் புஜங்களில் பரிசவுணர்ச்சி யிழந்துபோய் அவை சுஷ்கித்துப் போகும். 10—24½.

*தோளிலும் அதற்கு மேற்பட்டுமுள்ள மர்மங்களும் அவற்றின் அபிகாதத்தினாலுண்டாகும் அபாயங்களும்.*

கழுத்துக்கு இரு புறங்களிலும் கழுத்து, புஜம், சிரஸ் இம்மூன்றுக்குமிடையில், கழுத்தின் அடிப்புறத்தையும் தோள்ப்பட்டையையும் இணைத்துச் சேர்ப்பவைபான இரண்டு ஸ்நாயுக்கள் அம்ஸங்கள் என்கிற மர்மங்களாம்; இவற்றில் அபிகாதமுண்டானால் புஜங்கள் அவற்றின் வேலையை இழந்துவிடநேரிடும். கண்டநாடி யென்னும் பெரியநரம்புக் கொடிக்கு இரண்டு பக்கங்களிலும் முகவாய்க்கட்டையின் மூலப்பிரதேசங்களைப் பற்றிக்கொண்டு நான்கு மர்மங்கள் இருக்கின்றன; அவற்றுள் இரண்டு நீலா என்றும் இரண்டு மந்யா என்றும் வழங்கப்படும்; இவற்றில் அபிகாதமுண்டானால் குரல் கம்மிப்போய் அல்லது வேறுவித மாறுதலடைவதுடன், சுவையறியும் உணர்ச்சியும் குன்றிப்போகும். கழுத்திலுள்ள நாடிக்கொடியின் இருபுறங்களிலிருந்தும் நாக்குக்கும் நாசிக்கும் தனித்தனியே இரண்டிரண்டாகப்போகிற நான்கு நாடிகள் மாத்ருகைகள் என்னும் மர்மங்களாம்; இவை அபிகாதப்பட்டால் தக்ஷணமே பிராணாபாயமுண்டாகும். சிரஸஸும் கழுத்தும் கூடுமிடத்திலுள்ள இரண்டு மர்மங்கள் க்ருகாடிகைகள் எனப்படும்; அவ்விடம் அபிகாதமுண்டால் தலை நிற்கமுடியாமல் ஆடிப்போகும். செவிகளுக்குக் கீழே அடுத்தாற்போல இரண்டு பக்கங்களிலும் விதுரைகள் என்கிற இரண்டு மர்மங்கள் உண்டு; அவை தாக்கப்படுமானால் சப்தமுணரும் சக்தி யிழக்கப்படும். நாசியின் உட்புறப்பாதைக்கு இரண்டு பக்கங்களிலும், காதுகளுக்குச் செல்லும் பாதைகளை அநுஸரித்து ஓடுபவையான இரண்டு மர்மங்கள் தொண்டை

யினுள் மேற்புறமாய் அமைந்திருக்கின்றன ; அவ்விரண்டுக்கும் பணங்கள் எனப்பெயர் ; இவற்றின் அபிகாதத்தினால் நாசியானது மணமறியும் சக்தியை இழந்துவிடும். கண்களுக்கு வெளியில், புருவங்களுடைய வால்முனைகளுக்குக் கீழே அபாங்கங்கள் என்று இரண்டு மர்மங்களும், அவ்விதமே அவற்றிற்கு மேலே சிறு குழிபோன்றவையாய் ஆவர்த்தங்கள் என்று இரண்டுமர்மங்களும் உண்டு ; இந்த நான்கு மர்மங்கள் அபிகாதப்பட்டால் கண்கள் பார்க்கும் சக்தியை இழந்துவிடும். நெற்றிக்கட்டின் முனைகளில், செவிகளின் பக்கமாய் ஒவ்வொரு பக்கத்திலும் சங்கங்கள் என்று இரண்டு மர்மங்கள் உண்டு ; அவற்றில் அபிகாதமுண்டானால் உயிருக்கு உடனே அபாயம் சேரிடும். சங்கங்களுக்கு மேலே முன்னெற்றிமயிர்களின் இரேகைக்கு நேரில் உத்க்ஷேபங்கள் என்கிற இரண்டு மர்மங்களும், புருவங்களுக்கு நடுவில் ஸ்த்தபநீ என்கிற ஒரு மர்மமும் உண்டு; இந்த மூன்று மர்மஸ்த்தானங்களிலும் ஏதாவது சல்யம் உட்புகுந்தால் அச்சல்யம் வெளிப்படுத்தப் படாமலிருந்தால் அல்லது சல்யம் தானாகவே பழுத்து வெளிப்படுமானால மனிதனுக்கு அபாயமொன்றுமிராது ; அச்சல்யத்தை வலிய இழுத்து வெளிபபடுததினால் பிராணாபாயம் நேரிடும்.[1] தொண்டையாகிய மேல்வாயின் அடிப்புறத்தில், நாக்கு-நேத்திரம்-நாசி-செவி இவற்றின் த்வாரங்கள் ஒன்றுகூடும் பிரதேசத்தில், இந்த நான்கு ஸ்ரோதஸ்ஸுக்களாகிற சிருங்காடகங்கள் என்னும் மர்மங்களின் நான்கு வாயில்கள் அமைந்திருக்கின்றன. அவற்றில் அபிகாதமுண்டானால் உடனே பிராணாபாயம் நேரிடும். சிரக்கபாலத்தில் குறுக்காகவும் நெடுகவும் ஐந்து கூட்டுப் பாகங்கள் உண்டு ; அவைகளுக்கும் ஸீமந்தங்கள் எனப் பெயர் ; அவை அபிகாதப்படுமானால் தலைச்சுற்றலும், பித்துப்பிடித்தலும், மதிமயங்கிப்போவதும் ஆக இவ்வித விகாரங்கள் ஸம்பவித்து உயிரிழக்கநேரிடும். சிரஸ்ஸின் உச்சியில் ஸிரைகள்[1] ஒன்றுகூடுமிடத்தில் மயிர்ச்சுழியுள்ள மத்தியபாகத்தின் உட்புறமாக அதிபம் என்கிற மர்மம் அமைந்திருக்கிறது;[2] அது தாக்கப்படுமானால் உடனே உயிர்நீங்கிவிடும். 25-36½

மர்மத்தின் இலக்ஷணம்.

தேஹத்தில் எவ்விடம் விஷமமாகத் துடிக்குமோ, எவ்விடம் அழுத்தப்படுவதால் விஷமமான வலியுண்டாகின்றதோ அது மர்மஸ்த்தானம் ஆகும்.[3] 37.

மர்மங்கள் ஆறு விதம்.

மாம்ஸபேசிகள், அஸ்த்திகள், ஸ்நாயுக்கள், தமனிகள், ஸிரைகள், ஸந்திகள் இவற்றின் சேர்க்கை எங்கெங்கு இருக்கின்றதோ அவ்

1. சல்யம் வலிய இழுத்த வெளிப்படுத்தப்படுவதால் பிராணாபாயமுண்டாவதாலே இந்த மர்மங்கள் "விசல்யக்நங்கள்" என்று வழங்கப்படும் விசல்யக்நம் என்றால்—சல்யம் வெளிப்படுவதால் பிராணனைப் போக்குவது எனப்பொருள்.

1. ஸிரைகள் என்பதற்கு இவ்விடத்தில் காரிரத்தக் குழாய்கள் என்று பொருளல்ல; இந்த மர்மஸ்த்தானத்திற்குள்ள பிராதான்யத்தை உற்று நோக்கினால்,கிரந்தகர்த்தா ஸிரைகள் என்பதால் நரம்புகள் என்னும் நாடிகளின் தொகுதிகளைக் குறிப்பிடுவதாகக் கூறவேண்டும்.

2. அதிபம்—இதுவே மஸ்திஷ்கம் என்னும் மூளையின் முக்கியமான பாகமாகும். தேஹத்தில் ஸ்த்தூலமும் ஸூக்ஷ்மமுமான எல்லா அவயவங்களுடையவும் அகில காரியங்களையும் இவ்வவயவம் தனது அதிகாரத்தில் வைத்து நடத்து மியல்புடையதாகையால் இதற்கு அதிபம் எனப் பெயரிடப்பட்டதென்று அறிக. [இவ்வாறே முற்கூறிய மர்மங்களுக்கும் அவ்வவற்றின் தன்மைகளுக்குத் தகுந்தவாறு பெரும்பாலும் பெயரிடப்பட்டிருக்கின்றன.]

3. விஷமமான துடிப்புகளைக் கொண்டு சில மர்மங்களையும், விஷமமான நோவைக்கொண்டு வேறு சிலமர்மங்களையும் அறியலாம் எனக்கருத்து.

வவ்விடமும் மர்மமாகும்[1]; ஆகையினாலேயே இவ்விடங்கள் உயிருக்கு ஆதாரமானவையாம். முதலில் மர்மங்கள் வெகு விதமாக விவஹரிக்கப்பட்டபோதிலும்,[2] இங்கு கூறப்பட்ட விதமாக அவற்றை ஆறுதொகுதிகளாகப் பிரித்து எண்ணலாம். அல்லது மர்மங்கள் அனைத்துமே உயிர்நிலைகளாயமைந்துள்ளவை யென்னும் பொதுவான இலக்ஷணத்தைக்கொண்டு, அவையனைத்தையும் ஒரே தொகுதியாகவும் குறிப்பிட்டு எண்ணலாம். 38, 39.

மாம்ஸமர்மங்கள்.

நான்கு இந்திரவஸ்திகள், நான்கு தலஹ்ருதயங்கள், இரண்டு ஸ்தநரோஹிதங்கள் ஆக இப்பத்தும் மாம்ஸமர்மங்களாம். 39½.

அஸ்த்தி மர்மங்கள்.

எட்டு விதமான அஸ்த்தி மர்மங்கள் உண்டு; அவையாவன: சங்கங்கள் இரண்டு; கடீகதருணங்கள் இரண்டு, நிதம்பங்கள் இரண்டு; அம்ஸபலகங்கள் இரண்டு இவைகளாம். 40¼.

ஸ்நாயு மர்மங்கள்.

இருபத்திமூன்று ஸ்நாயு மர்மங்கள் இருக்கின்றன; அவையாவன: ஆணிமர்மங்கள் நான்கு, கூர்ச்சங்கள் நான்கு, கூர்ச்சசிரஸ்ஸுகள் நான்கு, அபாங்காங்கள் இரண்டு, க்ஷிப்ரங்கள் நான்கு, உத்க்ஷேபங்கள் இரண்டு, அம்ஸபலகங்கள் இரண்டு, வஸதி ஒன்று; ஆக இவைகளேயாம். 41.

தமனீ மர்மங்கள்.

குதம் ஒன்று, அபஸ்தம்பங்கள் இரண்டு, விதுரை இரண்டு, ச்ருங்காடகங்கள் நான்கு; ஆக இவ்வொன்பதும் தமனீமர்மங்கள் எனப்படும். 41¾

ஸிராமர்மங்கள்.

முப்பத்தேழு ஸிராமர்மங்கள் உண்டு; அவையாவன: இரண்டு ப்ருஹதிகள், எட்டு மாத்ருகைகள், இரண்டு நீலைகள், இரண்டு மந்யைகள், இரண்டு கக்ஷாதரங்கள், இரண்டு பணங்கள், இரண்டு விடபங்கள், ஒரு ஹ்ருதயம், ஒரு நாபி, இரண்டு பார்ச்வஸந்திகள், இரண்டு ஸ்தநமூலங்கள், இரண்டு அபலாபங்கள், ஒரு ஸ்த்தபநீ, நான்கு உர்வீக்கள், நான்கு லோஹிதாக்ஷங்கள் என்பனவாம். 42—43½.

ஸந்தி மர்மங்கள்.

இருபது விதமான ஸந்திமர்மங்கள் உண்டு. அவையாவன: ஆவர்த்தங்கள் இரண்டு, மணிபந்தங்கள் இரண்டு, குகுந்தரங்கள் இரண்டு, ஐந்து ஸீமந்தங்கள், இரண்டு கூர்ப்பரங்கள், இரண்டு குல்பங்கள், இரண்டு க்ருகாடிகைகள், இரண்டு ஜாநுக்கள், ஒரு அதிபதி ஆக இவைகளேயாம். 44, 44½.

சில மர்மங்களுக்குப் பெயரில் விவஹார பேதம்.

இதர வைத்தியாசாரியர்களுடைய[1] கொள்கைப்படி குதம மாம்ஸமர்மமாகவும், கக்ஷாதரங்கள்-விடபங்கள் - விதுரங்கள் இவை ஸ்நாயுமர்மங்களாக ளாகவும், ச்ருங்காடகங்கள் ஸிராமர்மங்களாகவும், கருதப்படுகின்றன; மேலும் அபஸ்தம்பங்களும் அபாங்கங்களும் தமனீமர்மங்களாகவும் அவ்வாசாரியர்களால் கருதப்படவில்லை.[2] 45, 46.

---

1. மாம்ஸபேசிமுதலியது அததற்குச் சொந்தமான இனத்துடன் தனித்தனியாகக் கூடும பாகம் மர்மம் என்று குறிக்கப்படுவதாகக் கருத்து. அதாவது—மாம்ஸபேசிகள் அநேகம் ஒருமிக்கக் கூடுமிடம் மாம்ஸமர்மமாகும்; இவ்விதமே அஸ்த்திமர்மம், ஸ்நாயுமர்மம், தமனீமர்மம், ஸிராமர்மம், ஸந்திமர்மம் இவற்றையும் கவனிக்கவேண்டும். ஸந்திமர்மம் என்றால், இரண்டு அஸ்திகள் கூடுமிடமல்ல; இரண்டுக்கு மேற்பட்ட எலும்புகளின் பலவிதமான கூட்டுகள் உள்ள இடம் ஸந்தி மர்மமாகும்.

2. வெகு விதமாக என்பதால் நூற்றேழு விதமாகப் பிரிக்கப்பட்டவிஷயம் குறிக்கப்படுகிறது.

1. தன்வந்தரி அல்லது ஸுச்ருதர் முதலியவர் இதரவைத்தியாசாரியர்கள் என்று குறிக்கப்படுகிறார்கள்.

2. வாக்படர் அபாங்கமர்மத்தை தமனீமர்மமாகத் தாமே கூறுமலிருக்க (இவரால் ஸ்நாயுமர்மமாகக்கூறப்பட்டிருக்க) இதரர் அதை தமனீமர்மமாகக் கூறவில்லை யென்பதன் கருத்து விளங்கவில்லை.

மாம்ஸபேசி ஸம்பந்தமான மர்மம் தாக்கப்படுமானல் இறைச்சி கழுவிய நீர்போல் ஒருவாறு தெளிவுள்ளதாய் இரத்தம் இடைவிடாமல் கசிந்துகொண்டிருக்கும்; உடலெங்கும் ஒருவாறு வெளிறிவிடும்; புலன்கள் விஷயமுணரும் சக்தியை இழக்கும்; இறுதியில் சீக்கிரத்திலேயே மரணம் ஸம்பவிக்கும்.[1] 47.

மாம்ஸமர்மம் அபிகாதப் படுவதனுலுண்டாகும் அபாயம்.

அஸ்த்திமர்மத்தில் அபிகாதமுண்டானல் அதில் ஏற்படும் இரத்தக்கசிவானது மஜ்ஜையுடன் கூடியதாகவும், தெளிவாகவும், இடைஇடையே விட்டுவிட்டும் பெருகிவரும்; வலியும் விசேஷமாயுண்டாகும். 47½.

அஸ்த்திமர்மம் அபிகாதப்படுவதால் உண்டாகும் அபாயம்.

ஸ்நாயு ஸம்பந்தமான மர்மத்தில் அபிகாதமுண்டானல் அவ்விடத்தில் விறைப்பும், கொறுக்குவலியும், அசைக்கமுடியாமையும், அதிகமான வலியும் உண்டாகும்; வாஹநங்களில் ஏறுவதற்கும், நிற்பது அல்லது படுத்திருப்பதற்கும், உட்காருவதற்கும் திறமையில்லாமற் போகும்; அவயவங்கள் உருவத்திலும் வேலையிலும் ஒழுங்கினமடையும்; அல்லது மரணமாவது நேரிடும். 48½.

ஸ்நாயுமர்மம் அபிகாதப் பட்டால் உண்டாகும் அபாயம்.

தமனீ ஸம்பந்தமான மர்மம் தாக்கப்படுமானல், தமனியிலிருந்து இரத்தம் ஒருவித சப்தத்தோடு உஷ்ணமாக நுரைத்துக் கொண்டு விசேஷமாய் வெளியாகும்; அம்மனிதனுக்கு மூர்ச்சையு முண்டாகும். 49.

தமனீமர்மம் அபிகாதப் படுவதால் உண்டாகும் அபாயம்

1. இரத்தம் எப்பொழுதும் இடைவிடாமற் கசிந்து இரத்தம் தேஹத்தில் குறைந்துவிடுவதால் உடல் வெளிறிவிடும். தேஹம் வெளுத்துப்போவதால் பலம் குன்றிப்போய் இந்த்ரியங்கள் அவற்றின் சக்தியை இழக்க நேரிடுகிறது; இவ்வாறு தேஹபலங் குன்றிப்போய் இந்த்ரியங்களும் சக்தியிழக்கவே சீக்கிரம் உயிர் துறப்பதும் அந்தநிலைமைக்கு இயல்பானதேயாம்.

விராமர்மத்தில் அபிகாதமுண்டானல், விரைகளிலிருந்து இரத்தம் தடிப்பாகவும், இடைவிடாமலும், அதிகமாகவும்பெருகும். அவ்விதம் இரத்தம் தேஹத்திலிருந்து வெளிப்பட்டுவிடுவதால் நாவறட்சியும், தலைச்சுற்றலும், மேல்ச்வாஸமும், மூர்ச்சையும், விக்கலும் கிரமமாக ஏற்பட்டு, இறுதியில் மரணமும் உண்டாகக்கூடும். 50.

விரா மர்மம் அபிகாதப் படுவதால் உண்டாகும் அபாயம்.

ஸந்திகள் ஸம்பந்தமான மர்மம் தாக்கப்படுமானல், தாக்கப்பட்ட இடத்தில் சூகங்கள் என்னும் சிறு மூளைகள் வியாபித்திருப்பது போன்ற இலக்ஷணம் காணப்படும்; அவ்விடம் ஆறிவிடுமாகில் அவ்விடம் முடமாகப்போய்விடும்; அவ்வவயவத்தின் இயற்கை வன்மையும் சலனவேலையும் இழக்கப்படும்; மற்ற பாகம் சுஷ்கித்து, அபிகாதமுண்டானபூட்டில் மட்டும் வீக்கம் நிலைத்துநிற்கும். 51.

ஸந்தி மர்மம் அபிகாதப்பட்டால் உண்டாகும் அபாயம்.

நாபி, இரண்டு சங்கங்கள், அதிபம், குதம், இருதயம், நான்கு ச்ருங்காடகங்கள், வஸ்தி, எட்டு மாத்ருகைகள் என்னும் இப்பத்தொன்பதும் ஸத்யப் பிராணஹர மர்மங்கள் எனப்படும்;[1] ஒருக்கால் பிராணபாயம் உடனே உண்டாகாமற் போகினும் அபிகாதமுண்டான பிறகு ஏழுநாட்களுக்குள் உயிருக்கு அபாயமுண்டாகும். 52, 52½.

ஸத்யப்பிராணஹர மர்மங்கள்.

இரண்டு அபஸ்தம்பங்கள், நான்கு தலஹ்ருதயங்கள், இரண்டு பார்ச்வஸந்திகள், இரண்டு கடீகதருணங்கள், ஐந்து ஸீமந்தங்கள், இரண்டு ஸ்தநமூலங்கள், நான்கு இந்திரவஸ்திகள், நான்கு க்ஷிப்ரங்கள்,

காலாந்தரப் பிராணஹர மர்மங்கள்.

1. ஸத்யப் பிராணஹரமர்மங்கள்—உடனே (அபிகாதப்பட்டஉடனேயாவது ஒருவாரத்திற்குள்ளாவது) பிராணபாயமுண்டாக்கும் உயிர்நிலைகள்.

இரண்டு அபலாபங்கள், இரண்டு ப்ருஹதீக்கள், இரண்டு நிதப்பங்கள், இரண்டு,ஸ்தநரோஹிதங்கள் என்னும் இம்முப்பத்து மூன்றும் காலாந்த்ரப் பிராணஹரமர்மங்கள்[1] எனப்படும்; என்றால் இவற்றில் அபிகாதமுண்டானால் ஒரு மாஸத்திலாவது ஒன்றரைமாஸத்திலாவது மரணம் ஸம்பவிக்கும். 54½.

விசல்யப்பிராணஹர மர்மங்கள்.

இரண்டு உத்க்ஷேபங்களென்ன, ஸ்தபநீயென்ன இம்மூன்றும் விசல்யப்பிராணஹர மர்மங்கள் என்று கூறப்படும்[2]; இந்த மர்மங்ககளில் எதிலேனும் சல்யம் ஏதாவது பிரவேசித்துவிட்டால், அவ்விடத்தில் வாயுவானது மாம்ஸபேசிகளையும், வஸையென்னும் ஒருவித இரத்தநீரையும், மஜ்ஜையையும், நரம்பு மிணங்களையும்[3] சோஷணம் செய்து, அவ்விடத்தில் வாயு மாத்திரம் சேர்ந்திருக்குமாகையால், சல்யத்தை வெளிப்படுத்தியதும், அவ்வாயுவும் வெளிப்பட்டு, ச்வாஸ-காஸங்களை உண்டாக்கி, உயிரைப் போக்கிவிடுகிறது. 55, 56.

வைகல்யகரமர்மங்கள்.

இரண்டு பணங்கள், இரண்டு அபாங்கங்கள், இரண்டு விதுரங்கள், இரண்டு நீலைகள், இரண்டு மந்யைகள், இரண்டு க்ருகாடிகைகள், இரண்டு அம்ஸங்கள், இரண்டு அம்ஸபலகங்கள், இரண்டு ஆவர்த்தங்கள், இரண்டு விடபங்கள், நான்கு உர்வீக்கள், இரண்டு குகுந்தரங்கள், இரண்டு ஜாநுகள், நான்குலோஹிதாக்ஷங்கள், நான்குஆணிகள், இரண்டுகக்ஷாதரங்கள், நான்கு கூர்ச்சங்கள், இரண்டு கூர்ப்பரங்கள் என்னும் இந்நாற்பத்துநான்கும் வைகல்யகர மர்மங்கள் எனப்படும்;[1] இவற்றிலும் அபிகாதம் மிக்க வலிவாகத் தாக்கினால் அவையும் சில ஸமயம் பிராணனைப் போக்கும். 57-58½.

ருஜாகர மர்மங்கள்.

கூர்ச்ச சிரஸ்ஸுகள் நான்கு, குல்பங்கள் இரண்டு, மணிபந்தங்கள் இரண்டு ஆக இவ்வெட்டும் ருஜாகர[2] மர்மங்கள் என்று வழங்கப்படும். 59.

மர்மங்களின் அளவுகள்.

அவற்றுள் விடபங்கள், கக்ஷாதரங்கள், உர்வீக்கள், கூர்ச்ச சிரஸ்ஸுகள் என்னும் இப்பன்னிரண்டு மர்மங்களில் ஒவ்வொன்றும் விஸ்தீர்ணத்தில் ஒவ்வொரு அங்குலம் அளவுடையதாகும். மணிபந்தங்கள், குல்பங்கள், ஸ்தநமூலங்கள் இவற்றில் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு அங்குலம் அளவான விஸ்தீர்ணமுடையன. ஜாநுக்களும் கூர்ப்பரங்களும் தனித்தனியே மும்மூன்று அங்குலம் அளவுடையவையாம். குதம், வஸ்தி, இருதயம், நாபி, நீலைகள், ஸீமந்தங்கள், மாத்ருகைகள், கூர்ச்சங்கள், ச்ருங்காடகங்கள், மந்யைகள் என்னும் இவ்விருபத்தொன்பது மர்மங்களும் அவரவருடைய கையால் ஒவ்வொரு உள்ளங்கை அளவுடையவையாம். மிச்சமுள்ள ஐம்பத்தாறு மர்மங்களும் அவரவருடைய கையால் அரை அங்குலம் அளவுள்ளவையாகும்; வேறு சில வைத்தியாசாரியர்களின் அபிப்பிராயப்படி இவை எள் அல்லது நெல் அளவுள்ளதாம். 62, 62¼.

1. காலாந்த்ரப் பிராணஹரமர்மங்கள்—அபிகாதமுண்டான சில காலங்கழித்து (ஒன்று அல்லது ஒன்றரை மாஸத்தில்) பிராணபாய முண்டாக்கக்கூடிய உயிர்நிலைகள்.

2. விசல்யப் பிராணஹாரம்— தேஹத்திற் பாய்ந்துள்ள சல்யத்தை வெளிப்படுத்துவதால் பிராணபாய முண்டாக்கும் உயிர்நிலையெனப் பொருள். இதுவே விசல்யக்நம் என்றும் கூறப்படும்.

3. மஸ்துலுங்கம் என்பதால் மூளையும், மூளைஸம்பந்தமான நரம்புகளின் அம்சமாயுள்ள கிணங்களும் குறிக்கப் படுகின்றன.

1. வைகல்யகர மர்மங்கள்—அபிகாதத்தினால் அந்தந்த அவயவம் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வகையில் ஸ்த்திரமான கோளாறை யடைந்து விடுமாகையால் இப்பெயர் வந்தது.

2. ருஜாகரங்கள்—அபிகாதத்தினால் வேறு எவ்வித விகாரமுமுண்டாகாமல் வலிமாத்திரம் எப்பொழுதும் நிலைத்திருக்கும் உயிர் நிலைகளாம்.

மர்மங்கள் தாக்கப்படுவதால் மரண முண்டாகும் வகை.

முன்னால் நான்கு விதங்களாக விவரிக்கப் பட்டுள்ள யாதொரு விரைகள் உண்டோ[1] அவை தேஹம் அனைத்தையும் போஷித்துத் திருப்தியுறச் செய்கின்றன. அதே விரைகள் மர்மங்களையும் ஆச்ரயித்திருக்கின்றன; அவை தாக்கப் பட்டு விட்டால், இரத்தம் மிதமிஞ்சி வெளிப் படுமாகையால் அப்பொழுது தாதுக்கள் விரைவில் க்ஷயமடைய நேரிடும்; அதனால் வாயு விருத்தியடைந்து கடுமையான வலியையும் வேதனையையும் உண்டுபண்ணும்; அப்பொழுது பித்தமும் தூண்டப்பட்டு விருத்தியடைய, அப்பித்த வெழுச்சியால் நாவறட்சி, தாதுக்ஷயம், வெறி, தலைச்சுற்றல் இவை உண்டாகும்; அப்பால் அவனுடைய தேஹத்தில் வியர்வை அதிகரித்து, அளவற்ற சிரமமும் தளர்ச்சியும் உண்டாய், இறுதியில் அவன் இறந்துவிடுகிறான். 63—65½.

மர்மம் தாக்கப்பட்டதும்செய்ய வேண்டிய சிகித்ஸை.

மர்மஸ்த்தானத்தில் அபிகாத முண்டானால், சீக்கிரம் அதற்கு ஸமீபத்திலுள்ள ஸந்திவரையில் அவ்வவயவத்தை அறுத்து விலக்கி விடவேண்டும்; ஏனெனில், ஸந்திப் பிரதேசம் வரையில் அறுக்கப்படுமானால், விரைகள் சுருங்கிக் கொள்ளும்; ஆகவே இரத்தப் பெருக்கு நின்று போய்விட, அதனால் பிராணபாயத்தினின்றும் பிணியாளி தப்பிவிடுவான். 66, 67.

மர்மஸ்த்தானங்களைக் காக்கவேண்டியதன் முக்கியம்.

மர்மஸ்த்தானமல்லாத விடத்தில் அபிகாதம் பலமாகத் தாக்கியபோதிலும் அம்மனிதன் பிழைப்பான்; பிராணஹரமெனக் கூறப்பட்டுள்ள மர்மத்திலோ சிறிதளவு தாக்கினாலும் பிழைக்கமாட்டான். எவனாவது ஒருவன் வைத்தியனுடைய திறமையினாலாவது, அபிகாதம் மிகச்சொற்பமாகத் தாக்கியதாலாவது பிழைத்துவிட்ட போதிலும், தாக்கப்பட்ட இடத்தில் ஏதேனும் நிலையான கோளாறு உண்டாய்விடும். மர்மஸ்த்தானங்கள் இவ்வளவு அபாயகரமாயிருப்பதால், அவ்விடங்களில் க்ஷாரப்பிரயோகம், விஷகுணமுள்ள ஔஷதங்களின் பிரயோகம், அக்னிப் பிரயோகம் இவை முதலியவற்றைச் செய்யாமல் ஜாக்கிரதையோடிருந்து சிகித்ஸை செய்ய வேண்டும். மர்மஸ்த்தானங்களில் தாக்கிய அபிகாதம் மிகச்சொற்பமாயிருந்தபோதிலும் பெரும்பாலும் அதிக துன்பமளிக்கும்; மர்மங்களைப்பற்றிய வியாதிகளும் அவ்விதமே பெருமுயற்சியோடுசிகித்ஸிக்கப்பட்டும் விசேஷமான கஷ்டங்களை யுண்டுபண்ணுகின்றன. 68—70.

## ஐந்தாம் அத்தியாயம்.

இனி விக்ருதி விஞ்ஞானசாரீரம்[2] என்னும் அத்தியாயம் விவரித்துக் கூறப்படும்.

ரிஷ்டத்தின் விவரம்.

இனி யுண்டாகும் கனிக்கு மலர் போலவும், அக்னிக்குப் புகைபோலவும், மழைக்கு மேகம் போலவும், ஸம்பவிக்கப்போகிற மரணத்துக்கு ரிஷ்டம்[1] என்பது நிச்சயமான குறியாகக் கருதப்படுகிறது. ரிஷ்டமன்றியில் மர

1. நான்கு விதமான விரைகளின் விவரத்தைப் பற்றி 278-ம் பக்கத்தில் விவரம் காண்க.

2. இயற்கை நிலைமை பிரக்ருதி எனப்படும்; பிரக்ருதியின் மாறுபட்ட நிலைமை (அதாவது பிரக்ருதத்தில் மனிததேஹத்தின் இயற்கைக்கு மாறானநிலைமை) விக்ருதி யெனப்படுகிறது. அவ்விகாரங்களை அறிவதற்கான இலக்ஷணங்களை விளக்கும் அத்தியாயம் "விக்ருதி விஞ்ஞானம்" என்று கூறப்படுகிறது.

1. ரிஷ்டம்—தேஹத்திற்கு வியாதி முதலியதால் உண்டாகப்போகிற அபாயங்களை அறிவிக்கும் முற்குறி.

ணம் உண்டாவதுமில்லை, உயிருடன் நீண்ட காலம் ஜீவித்திருக்கவேண்டியவனிடம் ரிஷ்டம் காணக்கூடியதுமில்லை. திறமையின்மையினால் ரிஷ்டமில்லாததை ரிஷ்டமாகவும், ரிஷ்டத்தை ரிஷ்டமல்லாததாகவும் பிரமிப்பதுண்டு. 1, 2.

ரிஷ்டங்கள் இரண்டு விதம்.

சிலர் ரிஷ்டத்தை இரண்டுவிதமாகப் பிரித்துக் கூறுவர்; அவற்றுள் ஒன்று ஸ்த்தாயி ரிஷ்டம் என்றும் மற்றொன்று அஸ்த்தாயி ரிஷ்டம் என்றும் கூறப்படும். தோஷங்கள் அதிகமாகச் சேர்ந்து வியாதி ஸம்பவித்தால், போலிரிஷ்டமும் உண்டாகக்கூடும்; இதுவே அஸ்த்தாயி ரிஷ்டம் என்றும் ரிஷ்டாபாஸம் என்றும் கூறப்படும்; விகாரமடைந்த தோஷங்கள் அடங்கிவிட்டால் அந்த அஸ்த்தாயி ரிஷ்டமும் அடங்கி மறைந்து விடும். ஸ்த்தாயி ரிஷ்டம் என்பது அவசியம் மரணம் உண்டாகுமென்பதைக் குறிப்பிடுவதாகும். 2½-3½

ரிஷ்டத்தின் ஸங்கிரஹமான இலக்ஷணம்.

உருவம் அல்லது நிறம், இந்த்ரியங்கள், குரல், சாயை, பிரதிச்சாயை யென்னும் பிரதிபிம்பம், செய்கை இவை முதலியவற்றிலும், மற்றுமுள்ள இயற்கைத் தன்மைகளிலும், காரணமறியமுடியாமலே விகாரம் உண்டானால், அதுவே ஸங்க்ஷேபமாய் ரிஷ்டம் எனப்படுவதாய் அறிக. 4, 5

ஒவ்வொரு அவயவத்தைப் பற்றிய ரிஷ்டக் குறிகள்.

உடலிலும் சிரஸ்ஸிலுமுள்ள மயிர்கள் எண்ணெய்முதலிய ஸ்நேஹவஸ்து சேராமலே எண்ணெய்ப்பூசியதுபோல் காணப்படும். கண்கள் மிகவும் உருண்டுருண்டு அடிக்கொண்டு அல்லது அசையாமல் இருந்துகொண்டு பள்ளத்தில் விழுந்து நிற்கும்; அல்லது கண்கள் மிகவும் அதிகமாய் வெளியிற் பிதுங்கி வந்திருப்பதாகத் தோற்றும்; வக்கிரமா யிருப்பதாகக் காணப்படும்; கண்கள் மூடப்படாமலே திறந்த நிலைமையிலும், மூடிய கண்கள் திறக்கப்படாமல் மூடிய நிலைமையிலும் நிற்கும்; வஸ்துக்களை நன்றாகப் பார்க்கமுடியாமல் தத்தளித்தப் பார்வையும், மந்தமான பார்வையும் ஏற்படும்; கிளிப்பிள்ளையின் கண்களைப்போலவும், மாடப்புறாவின் கண்களைப்போலவும், கொள்ளிக்கட்டையின் சாயலாகவும் தோற்றக்கூடும்; கண்களிலிருந்து அடிக்கடி ஜலம் பெருகும்; இமைமயிர்கள் உதிர்ந்துவிடும். நாசியானது மிகவும் விரிந்த த்வாரங்களோடு கூடியதாகவும், மிகவும் சுருங்கிய த்வாரங்களுள்ளவை போலவும், கொப்புளங்கள் நிரம்பியதாகவும், மிகவும் விரிந்து வீங்கியதாகவும், வடிப்புள்ளதாகவும், வாடியதாகவும் காணப்படும். உதடுகளோ மேலிருப்பது கீழே தொங்கியும், கீழிருப்பது மேலுக்கு உயர்ந்தும் நிற்கும்; இரண்டு உதடுகளும் கனிந்த நாவற்பழங்களைப் போன்றவைகளாயிருக்கும். பற்களில் சர்க்கரை யென்னும் காரை கட்டும். நாக்கு வக்கிரமாகவும், விஸர்ப்பம் என்னும் புண்களுடன் கூடியதாகவும், மிக வெளுத்தும், உலர்ந்தும், தடித்துப் பெருத்தும், கறுத்தும், ஏதோ மாப்பாண்டம் முதலியதால் பூசப்பட்டது போலவும், எப்பொழுதும் நீரொழுகிக்கொண்டும், முள்ளுகள்போன்ற முளைகளுடன் கூடியதுபோலவும் காணப்படும். கழுத்தானது சிரஸ்ஸைச் சுமந்து நிற்கமுடியாததாகவும், முதுகு தேஹத்தைத் தாங்கிக்கொண்டிருக்க வல்லமையற்றதாகவும் இருக்கும். தவடைகள் அல்லது முகவாய்க்கட்டையின் பாரிசங்கள் வாயில் இடப்பட்ட கபளத்தைத் தாங்கி மெல்லுவதற்குத் திறமையற்றதாகும். அவயவங்கள் யாவும் திடீரென்று அதிககுருவாகவோ இலகுவாகவோ ஆய்விடும்; விஷப்பற்றுதல் எதுவும் இல்லாமலே நாசி, செவி முதலிய த்வாரங்களிலிருந்து இரத்தப்

பெருக்கு உண்டாகும். ஆண்குறியில் துர்நீர்க் கசிவு உண்டாகும். பீஜகோசங்கள் அதிகமாகத் தாழ்ந்து தொங்கும். மேற்கூறிய குறிகளுக்கு விபரீதமான தோற்றங்கள் உண்டானால் அவையும் மிருத்யுவினால் ஏவப்பட்டு ஸம்பவித்த அவக்குறிகளேயாகும்.[1] 6-13¼.

பல இந்த்ரிய ஸம்பந்தமான ரிஷ்டங்களுடைய குறிகளின் விவரங்கள்.

ஒருவனுக்கு ஸிரைகள் என்னும் இரத்தக் குழாய்கள் நெற்றியிலாவது, வஸ்தியின் சிரஸ்ஸிலாவது கொடிகளைப் போலவாவது, சந்திரனின் இளம்பிறையைப் போலவாவது, அதற்கு முன் காணப்படாத வகையில் விளக்கமாகக் காணப்பட்டால், அவன் ஆறு மாதங்களுக்கு மேல் ஜீவித்திருக்கமாட்டான். ஒருவனுக்கு தேஹத்தில் விழுந்த ஜலமானது தாமரையிலையிலிருந்து நழுவுவதுபோல் சரீரத்தில் ஒட்டாமல் விழுந்துவிடுமானால் அவனும் ஆறுமாதங்களளவுமே ஜீவத்திருப்பான். எவனொருவனுக்கு ஸிரைகள் இலைப் பசுமை நிறமாகவும், மயிர்க் கால்களின் முகங்கள் மூடப்பட்டவையாகவும் ஆய்விடுகின்றனவோ, அவன் பித்தப் பிரகோபமடைந்து, அம்லரஸத்திலும் விருப்பமதிகரித்தவனாய்ச் சீக்கிரம் உயிர் துறப்பான். ஒருவனுக்கு முகத்திலாவது சிரஸ்ஸிலாவது எண்ணெய்ப் பசையுடன் கூடியதும் வறட்டிப் பொடியைப் போன்றதுமான சூர்ணம் உண்டாய் உதிருமானால், தலையிலிருந்து தூமமாவது கிளம்புமானால் அவனுக்கு உயிர் வாழ்வு ஒருமாத காலமேயாம். ஆரோக்கிய நிலைமையிலுள்ள ஒருவனுடைய சிரஸ்ஸிலாவது புருவங்களிலாவது புதிதாக ஸீமந்தங்கள் எனப்படும் வடுக்களும் சுழிகளும் உண்டாகுமானால், அவனுக்கு ஆறு தினங்களிலும், அதே குறிகள் வியாதிக் கிரஸ்தனுக்கு உண்டானால் மூன்று நாட்களிலும் மரணம் ஸம்பவிக்கும். ஒருவனுக்கு நாக்குக் கறுநிறமடைந்து, வாய் துர்க்கந்தம் வீசி, இடது கண் பள்ளத்தில் ஆழ்ந்துவிடுமானால், பக்ஷிகளாவது தலையின் மீது விழுந்தோடுமானால் அத்தகைய பிணியாளிக்கு சிகித்ஸை செய்யாமல் அவனைக் கைவிடவேண்டும். ஒருவன் ஸ்நானம் செய்து, சரீரமெங்கும் சந்தனம் முதலியதைப் பூசிக்கொள்ள, அவனுடைய தேஹத்தில் மார்பிலுள்ள பூச்சு மாத்திரம் மிகவும் உலர்ந்துவிட்டு, மற்ற அவயவங்களிலுள்ள லேபம் மாத்திரம் மிகவும் ஈரமாகவே இருக்குமானால், அவன் அரை மாஸத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டான். ஒருவனுடைய தேஹத்தில் திடீரென்று இயற்கை நிறமும் இயற்கைக்கு மாறான நிறமும் ஒரே காலத்தில் உண்டானாலும், அப்படியே தேஹத்தில் சில அவயவங்களுக்குப் புஷ்டியும் வேறு சிலவற்றிற்கு இளைப்பும் ஒரே ஸமயத்தில் ஸம்பவித்தாலும் அவை ஸமீபத்தில் மரணமுண்டாவதைக் குறிப்பிடுபவையாம். எவனுடைய விரல்கள் இழுத்துச் சுடிக்கப்படும்போது சுடிக்க முடியாமலிருக்கின்றனவோ அவனும் நீண்ட காலம்பிழைக்கமாட்டான். அப்படியே க்ஷயம், காஸம் முதலிய சில வியாதிகளிலும் விரல் சுடுங்காமலிருப்பது மரணக்குறியாகும். ஒருவனுக்கு இயற்கைக்கு விரோதமாக கண்டத்வனி யுண்டாவது, சுவாஸம் மிகக் குறுகி அல்லது நீண்டதாயிருப்பது, அல்லது நல்ல வாஸனையுள்ளதாகவோ துர்நாற்றமுள்ளதாகவோ இருப்பது, சரீரம் ஈரப்பசை யுடையதாக அல்லது முற்றிலும் ஈரப்பசையற்றதாகக் காணப்படுவது, தேஹத்திலும், மலம் வஸ்திரம் விரணம் முதலியவற்றிலும் மனிதனுக்கு இயல்பில்லாத ஒருவித

1. நேர் விபரீதமான தோற்றங்கள் என்பதால்-மயிர்களில் ஸ்நேஹம் பூசாமலே ஸ்நிக்த்தத் தன்மை முதலியவை காணப்படுவதற்கு நேர் எதிரிடையாக ஸ்நேஹம் பூசியும் ரூக்ஷமாகக் காணப்படுதல் முதலியவை குறிக்கப்படுகின்றன.

மணம் உண்டாவது என்னும் இக்குறிகளைக் கொண்டு அம்மனிதனுடைய ஜீவிதகாலம் ஒரு வருஷத்திற்குமேல் நீடித்திராது என்று அறியலாம். ஒருவனுடைய தேஹத்தில் நற்சுவையொன்று அதிகமாயேற்பட்டு ஈக்களும் பேன்களும் அதிகமாகச் சேர்ந்தாலும், அதிகமாக தேஹத்தில் அருசியுண்டாய், ஈக்களும் பேன்களும் இவனைவிட்டு விட்டாலும் அவனும் ஒருவருஷ காலத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டான். எப்பொழுதும் சூடாகவே இருந்துவரும் அவயவங்களில் திடீரென்று சைத்தியம் ஸம்பவித்தாலும், அவ்விதமே எப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருந்துவரும் அவயவங்களில் திடீரென்று அபரிமிதமான உஷ்ணம் உண்டானாலும், வியர்வை-தேஹம் அசைக்கமுடியாமற்போதல் இவை நிஷ்காரணமாய் திடீரென்று ஏற்பட்டாலும் அம்மனிதனும் ஒரு வருஷத்திற்குமேல் பிழைத்திருக்கமாட்டான். எவனொருவன் சைததியததை அதிகமாயுண்டாக்கக்கூடிய கட்டிகள் ஸம்பவித்தும் தேஹமே மிகக் குளிர்ச்சியாயிருப்பதாகக் காணப்பட்டும் அதிக அழற்சியை அநுபவிக்கின்றானோ, குளிர்ச்சியினால் வருந்தும் நிலைமையிலும் சூட்டில் வெறுப்புள்ளவனாயிருக்கிறானோ அவன சீக்கிரத்தில் இயமனுக்கு வசமாவான். எவனொருவனுக்கு மார்பில் உஷ்ணமும், வயிற்றில் அமிதமான குளிர்ச்சியும் ஏற்படுகின்றதோ, மலம் உடைந்து வெளியாவதுடன் நாவறட்சியும் உண்டாகின்றதோ அவன் சவத்திற்குச் சமானமானவனேயாம். மூத்திரமாவது, மலமாவது, சுக்ரமாவது ஜலததில் விடப்பட்டு அமிழ்ந்து விடுமானாலும், நாசியிலிருந்து வெளியாகும் கபமானது அநேக வர்ணமாயிருந்தாலும அவன் ஒரு மாஸத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டான். ஸமீபத்தில் மரிக்கப்போகும் மனிதன் ஆகாயம் ஸ்த்துலமாகப்போய் குரு பதார்த்தமாக மாறியிருப்பது போலவும், ஸ்த்தூலமான பூமிமுதலியது ஆகாயத்தைப்போல மாறியிருப்பது போலவும் காண்பான்; உருவமில்லாத வாயுமுதலிய வஸ்துவை உருவமெடுத்ததுபோலவும், உருவமுள்ளதை உருவமில்லாத வஸ்துபோலவும் காண்பான்; ஒளியுடன் பிரகாசிப்பதை ஒளியற்றதாகவும், அவ்விதமே வெண்மையானதைக் கறுப்பாகவும், இல்லாத வஸ்து ஒன்று எதிரில் இருப்பதாகவும் அவனுக்குத் தோற்றும்; நேத்திர ரோகமில்லாமலிருந்தும் ஒரு சந்திரனை அநேக சந்திரனாகவும் களங்கமற்றதாகவும் இருக்கக் காண்பதுண்டு. நித்திரையின்றி விழித்திருக்கையிலேயே இராக்ஷஸர்களையும்; கந்தர்வர்களையும், பிரேதங்களையும், மற்றும் அவைபோன்ற வேறு ரூபங்களையும் காண்பான். சீக்கிரம இறக்கப்போகிற மனிதனுக்கு பயங்கரமான உருவங்கள் கண்களில் புலப்படும். ஸப்த ருஷி நக்ஷத்திரங்களுக்கு ஸமீபத்திலுள்ள அருந்ததீ நக்ஷத்திரத்தையாவது, த்ருவநக்ஷத்திரத்தையாவது, ஆகாசகங்கையையாவது எவனொருவன் காணமுடியாதவனாகின்றானோ, அவன் ஒரு வருஷ காலத்திற்குமேல் பிழைத்திருக்கமாட்டான். ஒருவித சப்தமும் இல்லாத தருணத்தில் மேககர்ஜனை, நீரோட்டத்தின் தொனி, வீணை, மேளம், புல்லாங்குழல் இவற்றின் ஒலி, மற்றும் பலவிதமான சப்தங்கள் இவற்றைக் கேட்பான்; இவ்வித சப்தங்களில் ஏதாவது இருந்தால் அத்தருணத்தில் அது கேட்கப்படாமலும போய்விடும; காதுகளை விரல்களால் மர்த்தனம் செய்யும்போது "துக துக" என்கிற சப்தமும் கேட்காது; அவ்விதமே கந்தமென்ன, சுவையென்ன, பரிசமென்ன இவற்றையும், இருப்பவற்றை இராதவையாகவும், இராதவற்றை இருப்பவையாகவும் விபரீதமாக உணர்வான்; அல்லது முற்றிலும் உணரவேமாட்டான்; அவிந்து போகிற தீபத்தின் வாஸனையையும் மூகர்

தறிய முடியாதவனாயிருப்பான்; சாஸ்திர முறைப்படி உபயோகிக்கப்பட்ட இரஸங்கள் தேஹத்திற்குத் துர்க்குணமுண்டாக்கக்கூடியவையாகவும், முறைதவறாக உபயோகிக்கப்பட்டவை ஆரோக்கிய கரமாகவும் இருப்பதுண்டு. உடம்பில் புழுதி படிந்ததுபோல் தோற்றும். தேஹத்தில் அடி முதலியது தாக்குவதையும் அவன் உணரமாட்டான். கடுமையான தவம் புரியாமலும், சாஸ்திர முறைப்படி யோகாப்யாஸம் செய்யாமலும், இந்திரியங்களுக்கு அகோசரமான விஷயத்தை ஒருவன் அறிந்து விடுவானாகில் அவனுக்கும் சீக்கிரம் மரணமுண்டாகுமெனக் கூறலாம். 14—37½.

*குரல் வித்தியாஸங்களாலான ரிஷ்டங்களின் குறிகள்.*

எவனுடைய குரலானது ஹீனஸ்வரமாகவாவது, தீனமாகவாவது, நன்கு விளங்காததாகவாவது, தழுதழுத்ததாகவாவது இருக்கின்றதோ, எவனொருவன் ஏதோ சொல்ல விரும்பியும் திடீரென்று பேச முடியாமல் பிரமித்துவிடுகிறானோ அவன் நீடித்தநாள் ஜீவித்திருக்கமாட்டான். குரல் துர்ப்பலமடைந்தாலும், தேஹவன்மையாவது நிறயாவது ஹீனமானாலும், தகுந்த காரணங்களின்றியே வியாதியுண்டானாலும் அவ்விதக் குறிகளைக் கண்டு மரணம் ஸமீபத்திருப்பதாகக் கூறலாம். தனக்கு அந்திமகாலம் நேரிட்டிருப்பதாக இயற்கைக்கு விரோதமான தொனியோடு பேசுபவனும், அவ்விதமான சப்தமொன்று உண்டாவதாகச் செவியுறுபவனும் சிகித்ஸைக்குத் தகாதவனென்று நிச்சயித்து வைத்தியன் அவனைப் பரிஹரிக்கவேண்டும். 38—40½.

*பலவிதமான சாயைகளும் அவற்றின் ஸம்பந்தமான ரிஷ்டங்களும்.*

எவனுடைய சாயையானது அவனது இயற்கையான உருவமைப்பு என்ன, உருவத்தின் பிரமாணமென்ன, நிறமென்ன, ஒளியென்ன, இவைகள் விபரீதமாயிருப்பதாக ஸ்வப்னத்தில் தோற்றியபோதிலும் அம்மனிதன் பிரேதமாகவே ஆய்விடுவான். வெயில், கண்ணாடி, தண்ணீர் இவை முதலியவற்றில் அந்தந்த தேஹத்தின் உருவமைப்புக்கும் உருவ அளவுக்கும் ஏற்றவாறு சாயை ஒன்று உண்டாகின்றதோ அதுதான் பிரதிபிம்பம் எனப்படும். நிறமும் ஒளியும் எந்த நிழலில் இயற்கைப்படியே பிரதிபலிக்கின்றனவோ அது சரீரத்தின் ஸம்பந்தமான ஸாக்ஷாத் சாயையென்றே கூறப்படும். ஒருவனுடைய பிரதி பிம்பமானது அறுபட்ட உருவமுள்ளதாகவாவது, ஊளியாயிருப்பதாகவாவது, இயற்கையுருவத்திலும் அதிகமாகவாவது, தலையில்லாததாகவாவது, இரண்டு தலைகளுள்ளதாகவாவது, பயங்கரமான நிலைமையுள்ளதாகவாவது, அல்லது வேறு எவ்விதமான விகாரத்தைப் பெற்றிருப்பதாகவாவது காணப்படுமானால்—அவ்விதமான சாயையின் உருமாறாட்டம் அதற்கு இலக்ஷியமாயுள்ள கண்ணாடி முதலிய வஸ்துவின் விகாரத்தைக் காரணமாகக் கொண்டு ஏற்படாததாயிருக்குமாயின் — அம்மனிதனுக்கு ஆயுள் முடிவடைந்ததாய் அறியலாம். பிரதிச் சாயாரூபமான கன்னிகை எவனுடைய கண்களுக்குப் புலப்படுவதில்லையோ அவன் சீக்கிரம் இறந்துவிடுவான். 41—45.

*பஞ்சபூத ஸம்பந்தமான சாயைகளும் அவற்றினாலான ரிஷ்டங்களும்.*

ஆகாயம் முதலிய ஐந்து பூதங்களுக்கும் அதததற்கேற்றவாறு பற்பல இலக்ஷணங்களையுடைய ஐந்துவிதமான சாயைகள் உண்டு; அவையாவன :— ஆகாய ஸம்பந்தமான சாயையானது நிர்மலமாகவும், மிகவும் நீல நிறமாகவும், ஸ்நிக்த்தமாகவும், ஒளி வீசுவதுபோலவும் இருக்கும். வாதத்தினாலான சாயையானது புழுதிகளால் ஒருவாறு சிவந்ததாகவும், கறுநிறமாகவும், பஸ்மம் பூசியதுபோல ரூக்ஷமாகவும், ஒளியற்றதாகவும் இருக்கும். அக்னிஸம்பந்தமான

சாயையானது மிகவும் சென்னிறமாகவும், தேஜோமயமாகவும், பார்ப்பதற்கு இரமணீயமாகவும் இருக்கும். ஜலஸம்பந்தமான சாயையானது சுத்தமான வைடூர்யக் கல்லுபோல் நிர்மலமாகவும், மிகவும் ஸ்நிக்த்தமாகவும் இன்பந்தரக்கூடியதாகவும் இருக்கும். பூமிஸம்பந்தமான சாயையானது அசைவற்றதாகவும், ஸ்நிக்த்தமாகவும், குருகுணமுள்ளதாகவும், நிர்மலமாகவும், கறுஞ்சிவப்பாகவும் இருக்கும். வாயுஸம்பந்தமான சாயைமட்டும் வியாதிகள், மரணம், மற்றுமுள்ள அநேகவிதமான துன்பங்கள் இவற்றை உண்டுபண்ணும்; மற்ற பூதங்களின் சாயைகள் ஸுகமுண்டுபண்ணத் தகுந்தவையாம். எல்லாவிதமான பிரபையும் தேஜோமயமானது; அந்த பிரபையானது சிவந்தது, பொன்னிறமானது, வெண்மையானது, கறுநிறமுள்ளது, பசுமையானது, வெளிறியது, வெண்மையல்லாத ஒருவித நீலநிறமானது என்று ஏழுவகைப்படும். அவற்றுள் நாற்புறமும் மலர்ந்து பரவக்கூடியவையும், ஸ்நிக்த்தமானவையும், நிர்மலமா யிருப்பவையுமான பிரபைகள் சிறந்தவையாம்; மலினமாகவும், ரூக்ஷங்களாகவும், மலர்ச்சியின்றி சுருங்கியவையாகவுமுள்ள பிரபைகள் சிறந்தவையல்ல. 46—50½.

சாயைக்கும் பிரபைக்கு முள்ள பேதம் முதலிய விசேஷங்கள்.

சாயையானது தேஹம் முதலியவற்றின் நிறத்தைத் தான் கவர்ந்துகொள்ளும்; பிரபையோ நிறங்களைப் பிரகாசிக்கச்செய்யும். மேலும் சாயையை அருகில் வந்தால்தான் காணலாம்; பிரபையையோ தூரத்திலேயே நன்கு விளங்கக் காணலாம். சாயையற்றவனாகவாவது, பிரபையற்றவனாகவாவது ஒரு மனிதனும் இரான். சாயைகளை ஆதாரமாயுடைய விசேஷங்கள் யாவும் அந்தந்த காலத்தில் மனிதர்களுக்கு ஸம்பவிக்கக்கூடிய சுபாசுபங்களைக் குறிப்பிடக் கூடியவைகளா யிருக்கின்றன. 51—52½.

பலவகையான ரிஷ்டங்கள்.

தோள் சரிந்து பாதங்களைத் தேய்ப்பதுபோல எவனொருவன் நகர்ந்துச் செல்கிறானோ, எவன் ஹிதமான உணவை வேண்டியவளவும் புஜிப்பவனாயிருந்தும் அடிக்கடி வன்மையிழந்து வருகிறானோ, எவனொருவன் சொற்பமாக உணவுஎடுத்துக்கொண்டும் அதிகமாக மல மூத்திர விஸர்க்கம் செய்கிறானோ, அதிக உணவுகளை யுட்கொண்டும் சொற்பமாக மல மூத்திர விஸர்க்கம் செய்கிறானோ, எவன் சொற்பமாகப் புஜித்து—கபம் விருத்தியாய் அதனால் வருந்தி பெருமூச்சுவிட்டு இங்குமங்குமாகப் புரண்டு வருந்துகிறானோ, எவன் முதலில் மேன்மேலும் பெருமூச் செறிந்து அப்பால் குறுகிய ச்வாஸங்களை விட்டுக்கொண்டு பரிதவிப்பானோ, எவன் குறுகிய ச்வாஸங்களை விட்டுக்கொண்டு மிகவும் முறைகேடாக நாடிகள் துடிக்கக் கஷ்டப்படுகிறானோ, எவன் கரதலங்களை உதறிக்கொண்டு மிகவும் சிரமப்பட்டு சிரஸ்ஸை அசைக்கின்றானோ, எவன் எழுப்பப்படும்போது நெற்றியிலிருந்து வியர்வை வடிய ஸந்திபந்தங்கள் தளர்ந்துபோக மூர்ச்சையடைகிறானோ, எவன் பலிஷ்டனாக அல்லது துர்ப்பலனாக இருந்து நிமிர்ந்த நிலைமையிலேயே நித்திரை செய்கிறானோ, எவன் பாதங்களை இயற்கைக்கு விரோதமாக அநேகவகையில் அசைக்கிறானோ, எவன் படுக்கையிலும் ஆஸனத்திலும் சுவர் முதலியவற்றிலும் இல்லாத வஸ்துவை இருப்பதாகக் கருதி கிரஹிக்க முயற்சி செய்கிறானோ, சிரிக்கவேண்டிய அவசியமில்லாமலிருக்கையில் எவன் சிரிக்கிறானோ, உதடுகளை எப்பொழுதும் எவன் நாக்கினால் துடைத்துக்கொள்கிறானோ, மேல் உதட்டை நாக்கினால் தடவிக்கொண்டு எவனொருவன் துப்புகிறானோ, கறுப்பாகவோ, பொன்னிறமாகவோ, சிவப்பாகவோ காணப்படும் சாயையானது எவர்களை பின்

பற்றி துன்பப்படுத்துகின்றதோ, வைத்தியர் - ஆசாரியர் - ஔஷதம் - அன்னபானங்கள் - தோழர்களின் சேர்க்கை முதலியவற்றை எவர் பகைக்கிறார்களோ இவர்கள் அனைவரும் சீக்கிரம் யமனுக்கு வசப்படுவார்கள். எவனுக்குக் கழுத்தும், நெற்றியும், மார்பும் வியர்த்து மிகவும் குளிர்ந்து மற்ற அவயவங்கள் மிகச் சூடாக இருக்கின்றனவோ அவனுக்கு தெய்வமே கதியாம். எவனுக்கு உடலின் இயற்கையொளியானது மிகவும் சொற்பமாக மழுங்கிப் போய், மனதும் குழப்பமுற்று எப்பொழுதும் வருத்தங்கொண்டு சாயையும் கோளாறடைந்து விடுகின்றதோ, எவனால் அளிக்கப்பட்ட பலியை வாயஸம் முதலியவை தின்காமல் விட்டு விடுகின்றனவோ, எவன் தகுந்த காரணமின்றியே நல்ல புத்தி விசேஷத்தையும் - காந்தியையும் - தேஹச் செழிப்பையும் - செல்வத்தையும் திடீரெனப் பெறுகிறானோ அல்லது இழந்து விடுகிறானோ அம்மனிதன் சீக்கிரம் மரித்து விடுவான். ஆரோக்கியநிலைமையிலிருப்பவனுக்காவது பிணியாளிக்காவது ஸத்வாதி குணமயமான அல்லது வாதாதி தோஷமயமான பிரக்ருதியெனப்படும் இயற்கைத் தன்மையானது அதற்குற்ற நிலைமையினும் மாறுபாடடைந்தால், அவன் ஆறு மாதங்கள் வரையில் ஜீவித்திருக்கமாட்டான். பக்தி, நன்னடக்கை, ஞாபகசக்தி, ஔதார்யம், புத்தி, தேஹவன்மை இந்த ஆறும் காரணமின்றியே போய்விடுமானால் அவன் ஆறுமாதக்களில் மரித்து விடுவான். நடந்து செல்லும்போதும் பேசும்போதும் வெறிபிடித்தவன்போல நடுக்கமுண்டாய் மூர்ச்சையும் ஸம்பவித்தால் அவன் ஒரு மாதத்தில் இறந்துவிடுவான். மயிர்களை வேருடன் பிடுங்குமபோது வலியொன்றும் உணரப்படாவிட்டால் அவன் ஆறு நாட்களில் இறப்பான். எவனுக்குத் தொண்டை வியாதியின்றியே உணவு தொண்டையினுள் செல்லுவதில்லையோ, ஊழியம் செய்பவர் எதிர்த்து விரோதம் பாராட்டுகிறார்களோ, எவனுக்குப் பிரேதத்தின் உருவம் உண்டாகின்றதோ, எவனுக்கு இடைவிடாமல் எப்பொழுதும் நித்திரையுண்டாகின்றதோ, அல்லது முற்றிலும் நித்திரையுண்டாவதில்லையோ அவன் வெகு நாள் பிழைத்திருக்கமாட்டான். கண்ணீர் வரும் த்வாரம் அந்த நீரால் அடிக்கடியும் நிரப்பப்படுமானாலும், கால்கள் மிகவும் வியர்க்குமானாலும், கண்ணும் வியாகுலப்பட்டு அசைந்தாலும் அவன் சீக்கிரம் உயிரிழப்பான். முன்னால் எவ்விஷயங்களால் மனங்களித்து வந்தானோ அதேவிஷயங்களால் பிற்காலத்தில் கிலேசமுண்டானால் அவனும் அதிக நாள் ஜீவித்திருக்கமாட்டான். 53-6-9½.

வியாதிகளைப் பற்றிய ரிஷ்டங்கள்.

எவனுக்கு ஒரு வியாதியானது திடீரென்று ஸகல லக்ஷணங்களோடேயும் ஸம்பவிக்கின்றதோ, அவ்விதமே திடீரென்று எவனுக்கு அத்தகைய வியாதி நிவ்ருத்தியாகின்றதோ அம்மனிதன் திடீரென்று மரணமடைவான். ஜ்வரமானது அதிக தீவ்ரமாகவும், எல்லா தாதுக்களையும் ஆச்ரயித்ததாகவும், வெகு நீடித்த நாட்களாகத் தொடருவதாகவும், வாய்ப் பிதற்றல் - தலைச்சுற்றல் - ச்வாஸவேகம் இவற்றோடு கூடியதாகவும் இருந்து, பிணியாளியும் இளைத்து அல்லது வீங்கிப்போய், ஜாடராக்னியும் அழிவுற்றவனாயிருந்தால், அல்லது பலசாலியாகவும் - வாய் பேசமுடியாதவனாகவும் - இருதயத்தில் குத்தல் வலியுள்ளவனாகவும் இருந்தால் அவனுக்குக் கபமின்றியே இருமலுடன் கூட காலையிலாவது மாலையிலாவது அவ்வித ஜ்வரம் உண்டாகுமானால், தேஹவன்மையும் தசை நார்களும் சுஷ்கித்துப் போய் - கபம் அதிகரித்து - ச்வாஸத்துடன் கூட ஜ்வரம் விருத்தியானால் அம்மனிதன் திடீரென்று இறப்பான். இரத்தபித்த

ரோகத்தில் வெளிவரும் இரத்தமானது மிகவும் சென்னிறமாகவும், கறுப்பாகவும், இந்திர தனுஸ்ஸு போன்ற நிறமுள்ளதாகவும், செம்பின் நிறமுடையதாகவும், மஞ்சளாகவும் காணப்படுமானலும், மயிர்க் கால்களிலிருந்தும் கழுத்திலிருந்தும் மார்பிலிருந்தும் இரத்தம் வெளிப்படுமானலும், இரத்தம் வஸ்திரத்தில் சாயமுண்டுபண்ணுமானலும், துர்வாஸனையுடையதானலும், வேகத்துடன் அமிதமாக வெளிப்பட்டாலும், பாண்டுரோகம் - ஜ்வரம் - வாந்தி - காஸம் - சோகை - அதிஸாரம் இவற்ருல் பீடிக்கப்படுபவருக்கு இரத்தமும் அதிகமாய் வெளிப்பட்டாலும் அவை ரிஷ்ட லக்ஷணங்களாம். காஸரோகமும், ச்வாஸரோகமும் ஜ்வரம் - வாந்தி - நாவறட்சி - அதிஸாரம் - சோகை இவற்றுடன் கூட ஸம்பவித்தால் அப்பிணியாளிகளும் சீக்கிரம் உயிர்துறப்பர். க்ஷயரோகமானது பார்ச்வசூலை, வயிற்றுப்பொருமல், இரத்தம் வாந்தியாதல், அதிஸாரம் இவற்ருேடு உண்டாயிருந்தால், அதுவும் பிராணபாயம் விளைவிக்கத் தகுந்ததாம். சர்த்தி யென்னும் வாந்தியானது அதிக வேகமாகவும், மலமூத்திரங்களின் துர்வாஸனைபோடும் - சந்திரிகைகளென்னும் பலநிறமான பிந்துக்களோடும் கூடிய பதார்த்தங்கள் வெளிவருமாறும் ஏற்பட்டிருந்தால், இரத்தம் - மலம் - சீழ் இவற்றை வெளிப்படுத்துவதோடு, வலி - ச்வாஸம் - காஸம் இவற்றுடன் கூடியதாய் வெகு நாட்கள் தொடருமாயின் அப்பிணியாளி வெகுநாட்கள் ஜீவித்திருக்கமாட்டான். வேறு ரோகங்களால் பீடிக்கப்பட்டு இளைத்துப் போயிருப்பவனுக்கும், நாக்கை வெளியில் தொங்கவிட்டு கஷ்டப்படுபவனுக்கும், பிரஞ்ஞைபற்றவனுக்கும் உண்டான திருஷ்ணை யென்னும் நாவறட்சியானது ஆயுளை திடீரென்று அழிக்கும். மிகவும் சைத்தியத்தினல் பீடிக்கப்படுபவனும், இளைத்திருப்பவனும், தைலம் உபயோகித்தது போல் முகம் கசிந்து விகாரமடைந்தவனுமான மதாத்யயரோகியானவன் வெகு நாள் பிழைத்திருக்கமாட்டான். அர்சோ ரோகத்தில் கைகள் - பாதங்கள் - நாபி - குதம் - பீஜகோசங்கள் - முகம் - இவை வீங்கியும், இருதயம் - விலாப்பக்கங்கள் - மற்றுமுள்ள இதர அவயவங்கள் இவற்றில் வலியும், வாந்தியும், குதம் அழன்றும், ஜ்வரமும் உண்டாய் கஷ்டப்படுவானுல் அப்பிணியாளி பிழைக்கமாட்டான். அதிஸாரத்தில் வெளிவரும் மலமானது கல்லீரலின் துண்டுகளைப்போலவும், இறைச்சி கழுவிய நீர் போலவும் ஒருவாறு கறுஞ் சிவப்பாகவும், தைலம்-நெய்-பால் - தயிர் - மஜ்ஜை - வஸை- ஆஸவம் - மூளை - மை - கஞ்சி - வேஸவாரம் - தண்ணீர் - தேன் இவற்றைப் போன்றதாகவும் காணப்படுமானல் அதுவும் அவக்குறியாகும்; அந்த மலம் மிகவும் சிவப்பாகவும், மிகக் கறுப்பாகவும், மிகவும் துர்க்கந்தமாகவும், அதிக தெளிவாகவும், மிக்க வேதனையைக் கொடுப்பதாகவும், பலவித நிறமுடையதாகவும், தாதுக்களை அறுத்து வெளிப்படுத்துவதாகவும், இயற்கையான கழிவுப்பொருளற்றதாக அல்லது அதிக கழிவுப்பொருளுடன் கூடியதாகவும் இருந்தாலும், ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தாலும், நூலிழைபோன்ற வஸ்துக்களென்ன - பலவித இரேகைகளென்ன இவற்றுடன் கூடியதாயிருந்தாலும், குதத்தினுள் உள்ள மூன்றுவித வளிகள் என்னும் மடிப்புகள் சிதைவுற்று - நாளம் என்கிற இரத்தக்குழாய் அறுபட்டு - கணுக்களிலும், எலும்புகளிலும் வேதனையுண்டாய், குதம் நெகிழ்ந்து - முற்றிலும் பலமிழந்து - உணவு ஜீர்ணயாகாமல் அவ்விதமே வெளிவந்தாலும், பிணியாளிக்கு நாவறட்சி - பெருமூச்செரிதல் - ஜ்வரம் - வாந்தி - எரித்தல் - வயிற்றுப் பொருமல் - வயிற்றுக்கடுப்பு இவை உண்டாயிருந்தாலும் அவன் இறந்துவிடுவான். அச்மரீ யென்னும் மூத்திரத்தின்

தாதுப்பேர்ருள் உறைந்துவிடும் வியாதியில் ஆண்குறி வீங்கி அழுன்றுபோய், மூத்திரம் வெளிவரமுடியாமற் கட்டப்பட்டு, வேதனை அபரிமிதமாயுண்டாய் வருந்தும் பிணியாளியும் பிழைக்கமாட்டான். பிரமேஹத்தில் நாவறட்சியும், தேஹ அழற்சியும், பிடகைகள் என்னும் கட்டிகளும், தேஹத்தில் மாம்ஸ பேசிகள் பதனழிதலும், அதிஸாரமும் உண்டானால் அவனும் இறந்துவிடுவான். பிடகைகள் என்னும் கட்டிகள் மர்மஸ்க்தானங்களில், முக்கியமாய் இருதயத்திலும், பிருஷ்டபாகத்திலும், முலைகளிலும், தோள்களிலும், குதத்திலும், சிரஸிலும், கணுக்களிலும், உள்ளங்காலிலும், உள்ளங் கையிலும் உண்டானாலும், பிணியாளி உத்ஸாஹமிழந்தவனாய்ப் பிரமேஹமுள்ளவனாயிருந்தாலும் உயிர் துறப்பான்; மாம்ஸபேசிகள் சுருக்கங் கொள்ளுதல், அழற்சி, நாவறட்சி, வெறி, ஜ்வரம், விஸர்ப்பம், மர்மஸ்த்தானங்கள் தாக்கப்படுதல், விக்கல், ச்வாஸம், தலைச்சுற்றல், உடல் சோர்ந்துபோதல் இவ்வித கோளாறுகளுடன் கூடிய பிடகைகளும் பிராணாபாயம் விளைவிக்கும். குன்மரோகமானது திரண்டுருண்டு மிகப் பருமனாகவும், கனமாகவும், ஆமையைப்போல் முதிர்ந்து மேலோங்கிக் கிளம்பியதாகவும், விரைகளால் வியாபிக்கப்பட்டதாகவும் ஜ்வரம் - வாந்தி - விக்கல் - பொருமல் - வலி இவற்றுடன் கூடியதாகவும், காஸம் - பீநஸம் - இயற்கைக்கு விரோதமான இருதயத்துடிப்பு - ச்வாஸம் - அதிஸாரம் - உடல் வீக்கம் இக்கோளாறுகளை யுடையதாகவும் இருந்தால் பிராணாபயம் விளைவிக்கக் கூடியதாகும். மஹோதரமானது மலமூத்திரச் சிக்கலோடும், ச்வாஸத்தோடும், வீக்கத்தோடும், விக்கலோடும், ஜ்வரத்தோடும், தலைச்சுற்றலோடும் கூடியிருந்தால், மூர்ச்சையும் வாந்தியும் அதிஸாரமும் உண்டாயிருந்தால் அது உயிரைப் போக்கிவிடும்; மேலும் அவ்வியாதியில் கண்கள் வீங்கியும், ஆண்குறி வக்கிரமாகவும், உடம்பில் எங்கும் சர்மம் வியர்த்துக் கசிந்ததாகவும், விரேசனௌஷதங்களால் வயிறு தளர்ந்திருந்தும் மீண்டும் அடிக்கடியும் வயிற்றுப்பொருமல் அதிகமாய் உண்டாவதுமான மஹோதரம் பிராணாபாயம் விளைவிப்பதாகும். பாண்டு ரோகத்தில் வீக்கம் அதிகரித்து, கண்களும் நகங்களும் பார்வையும் மஞ்சள் நிறமாகப் போயிருந்தால் அவக்குறியான ரிஷ்டமாகும். சோம்பல், அழற்சி; அரோசகம், வாந்தி, மூர்ச்சை, வயிற்றுப்பொருமல், அதிஸாரம், மற்றும் பலவிதமான உபத்திரவங்கள் இவற்றுடன் கூடிய சோபை யென்னும் சோகை அபாயகரமானது; இரத்தக்குழாய் முதலியவை மேலே கோடுகோடாய் பரவியிருப்பதாய்க் காணப்பட்டாலும், ஊனீர் முதலியது கசிந்தாலும், வாந்தி, ஜ்வரம், ஸ்வாஸம், அதிஸாரம் இவை அனுஸரித்திருந்தாலும் ஆகாது; வீக்கம் புருஷர்களுக்குப் பாதங்களில் ஆரம்பித்து மேன்மேலும் உடலிற் பரவினாலும், ஸ்த்ரீகளுக்கு சிரஸிலிருந்து உடலெங்கும் கீழ்நோக்கி வியாபித்தாலும் அவக்குறிகளாம்; வயிற்றிலும் ஆண் பெண் குறிகளிலும் ஆரம்பித்துப் பரவும் வீக்கம் இருபாலருக்கும் ஆகாது; சோபை அடங்கிய ஸமயத்தில் ஜ்வரமும் அதிஸாரமும் உண்டானாலும், ஜ்வராதிஸாரங்கள் தணிந்திருக்கையில் சோகை யுண்டானாலும், அதிலும் முக்கியமாய் பலஹீனனுக்கு அவ்வித நிலைகள் உண்டாகுமானால், அவை பிராணாபாயத்திற்குக் காரணமாகும். எவனொருவனுக்கு வீக்கம் பாதத்தில் மட்டும் உண்டாகுமோ, அட்டுச்சதையென்னும் முழங்காலுக்குக் கீழே பின்புறமாயுள்ள சதைகள் இடம் விட்டு நகர்ந்து முரண்படுகின்றனவோ, கால்களும் இளைத்துவிடுகின்றனவோ அவனை வைத்தியன் சிகித்ஸைக்கு உதவாதவன் என்று விலக்கிவிடவேண்டும்;